# தேசிய உயர் கல்வி தரவரிசை பட்டியல் சென்னை ஐ.ஐ.டி., தொடர்ந்து முதலிடம்

சென்னை, ஜூன் 6-

உயர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசை பட்டியலில், சென்னை ஐ.ஐ.டி., தொடர்ந்து ஐந்தாம் ஆண்டாக, முதலிடம் பெற்றுள்ளது. மத்திய கல்வி துறை சார்பில், நாட்டில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களின் செயல் திறன் அடிப்படையில், தேசிய தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான தரவரிசை பட்டியலை, மத்திய கல்வி துறை இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன்சிங், நேற்று புதுடில்லியில் வெளியிட்டார். இதில், 'டாப் 20' பட்டியலில், தமிழகத்தை சேர்ந்த நான்கு கல்வி நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன.

சென்னை ஐ.ஐ.டி., - முதலிடம்; கோவை அம்ரிதா விஸ்வ வித்யாபீடம், 15; வி.ஐ.டி., 17 மற்றும் அண்ணா பல்கலை, 18ம் இடங்களை பிடித்துள்ளன.

## தேசிய அளவில்...

### டாப் 20 நிறுவனங்கள்

| பெயர் | தரவரிசை 2022 | தரவரிசை 2023 |
|---|---|---|
| இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் - சென்னை ஐ.ஐ.டி | 1 | 1 |
| ஐ.ஐ.எஸ்சி., பெங்களூரு | 2 | 2 |
| ஐ.ஐ.டி., டில்லி | 4 | 3 |
| ஐ.ஐ.டி., மும்பை | 3 | 4 |
| ஐ.ஐ.டி., கான்பூர் | 5 | 5 |
| எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி, டில்லி | 9 | 6 |
| ஐ.ஐ.டி., கரக்பூர் | 6 | 7 |
| ஐ.ஐ.டி., ரூர்க்கி | 7 | 8 |
| ஐ.ஐ.டி., கவுஹாத்தி | 8 | 9 |
| ஜவஹர்லால் நேரு பல்கலை | 10 | 10 |
| பனாரஸ் இந்து பல்கலை | 11 | 11 |

## தமிழகத்தில்...

### பல்கலைகள்

| பெயர் | தரவரிசை 2022 | தரவரிசை 2023 |
|---|---|---|
| அமிர்தா விஸ்வ வித்யாபீடம் | 5 | 7 |
| வேலுார் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி வி.ஐ.டி. | 9 | 8 |
| சவீதா மருத்துவ பல்கலை | 26 | 13 |
| அண்ணா பல்கலை | 20 | 14 |
| எஸ்.ஆர்.எம்., பல்கலை | 19 | 18 |
| பாரதியார் பல்கலை | 15 | 21 |
| சாஸ்த்ரா பல்கலை | 24 | 26 |
| கலசலிங்கம் பல்கலை | 35 | 29 |
| அழகப்பா பல்கலை | 28 | 30 |
| பாரதிதாசன் பல்கலை | 57 | 41 |

தினமலர் 6-6-2023 P-14

### கல்லூரிகள்

| பெயர் | தரவரிசை 2022 | தரவரிசை 2023 |
|---|---|---|
| மாநில கல்லூரி, சென்னை | 3 | 3 |
| பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை | 6 | 4 |
| லயோலா கல்லூரி, சென்னை | 4 | 7 |
| சென்னை கிறிஸ்துவ கல்லூரி, சென்னை | 17 | 16 |
| தியாகராஜர் கல்லூரி, மதுரை | 22 | 18 |
| பி.எஸ்.ஜி., கலை அறிவியல் கல்லூரி, கோவை | 20 | 20 |
| செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி | 26 | 25 |
| வ.உ.சி., கல்லூரி, துாத்துக்குடி | 30 | 27 |
| கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை | 31 | 29 |

### பார்மசி

| பெயர் | தரவரிசை 2022 | தரவரிசை 2023 |
|---|---|---|
| ஜே.எஸ்.எஸ்., காலேஜ் ஆப் பார்மசி | 8 | 4 |
| அமிர்தா விஸ்வ வித்யாபீடம் | 14 | 10 |
| எஸ்.ஆர்.எம்., பல்கலை | 12 | 15 |
| அண்ணாமலை பல்கலை | 15 | 26 |
| ஸ்ரீராமச்சந்திரா பல்கலை | 31 | 36 |
| வேல்ஸ் பல்கலை | 34 | 47 |
| பி.எஸ்.ஜி., பார்மசி கல்லூரி | 70 | 61 |
| சென்னை மருத்துவ கல்லூரி பார்மசி | 63 | 74 |
| நந்தா பார்மசி கல்லூரி | 50 | 77 |
| கலசலிங்கம் பார்மசி கல்லூரி | 82 | 97 |

### மருத்துவம்

| பெயர் | தரவரிசை 2022 | தரவரிசை 2023 |
|---|---|---|
| கிறிஸ்துவ மருத்துவ கல்லூரி சி.எம்.சி. | 3 | 3 |
| அமிர்தா விஸ்வ வித்யாபீடம் | 8 | 8 |
| சென்னை அரசு மருத்துவ கல்லூரி | 12 | 11 |
| சவீதா மருத்துவ பல்கலை | 25 | 18 |
| எஸ்.ஆர்.எம்., பல்கலை | 20 | 20 |
| ஸ்ரீராமச்சந்திரா பல்கலை | 15 | 21 |
| பி.எஸ்.ஜி., மருத்துவ அறிவியல் கல்லூரி | 55 | 40 |
| செட்டிநாடு அகடமி ஆப் ரிசர்ச் | 39 | 48 |

### பல் மருத்துவம்

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
07-06-2023 பக்கம்.எண்:3

# Thiagarajar College

Madurai-09, Tamil Nadu, India

74

## THIAGARAJAR COLLEGE ALUMNI ASSOCIATION

CONGRATULATIONS TO
STUDENTS, TEACHERS, ALUMNI, MANAGEMENT &
WELL WISHERS FOR ACHIEVING

## 18th Rank in NIRF 2023




Through consistent efforts in improvising the quality of education,
Thiagarajar College secured 18th rank (in all India level)
in NIRF rankings 2023.
We re-dedicate ourselves in achieving
excellence in education.

**DINAMALAR**

**07-06-2023** பக்கம்.எண்:3

# Thiagarajar College

Madurai-09, Tamil Nadu, India

74

## THIAGARAJAR COLLEGE ALUMNI ASSOCIATION

**CONGRATULATIONS TO**

**STUDENTS, TEACHERS, ALUMNI, MANAGEMENT & WELL WISHERS FOR ACHIEVING**

## 18th Rank in NIRF 2023




Through consistent efforts in improvising the quality of education, Thiagarajar College secured 18th rank (in all India level) in NIRF rankings 2023.

We re-dedicate ourselves in achieving excellence in education.

THE HINDU

7-06-2023 Pg No: 3

# Thiagarajar College

(An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University)

139 & 140 Kamarajar Salai, Teppakulam, Madurai-625 009, Tamil Nadu, India

Website: www.tcarts.in E-mail: principaltcarts@gmail.com Phone: 0452 - 2311875

## ADMISSION NOTICE 2023 - 2024

**Online Applications are invited for admission to the following**

### Aided Programmes

- B.A. - Tamil, English, Economics (Tamil Medium)
- B.Com.
- B.B.A.
- B.Sc. - Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, Computer Science
- M.A. - Tamil, English & Economics
- M.Sc. - Mathematics, Physics, Chemistry, Botany & Zoology
- M.Phil - Tamil, English, Botany & Zoology

### Self-Financed Programmes (SF)

- B.A. English
- B.Com.
  - B.Com. (Professional Accounting)
  - B.Com. (Computer Applications)
  - B.Com. (Honours)
  - B.Com. (Business Process Services)
- B.C.A.
- M.Com. - (ICWAI integrated)
- M.Sc. - Mathematics, Computer Science, Chemistry, Microbiology, Biotechnology
- B.B.A.
- B.Sc. - Mathematics, Physics, Chemistry, Biotechnology, Microbiology, Computer Science, Computer Science in Cognitive System, Information Technology, Data Science and Psychology

**LAST DATE**

UG - 19.05.2023

PG - 22.05.2023

Apply Online

www.tcarts.in

Ph.D. - Tamil, English, Economics, Commerce, Mathematics, Physics, Chemistry, Botany, Zoology & National Centre for Excellence (MHRD)

- ✓ 20% seats are reserved for CBSE and ICSE students in Self-Financed Programmes
- ✓ Students excelling in sports at state/national level will also be given preference

Dr. D. Pandiaraja, Principal K. Hari Thiagarajan, Secretary

Thiagarajar College - Arts and Sciences Teppakulam www.tcarts.in thiagarajararts Thiagarajar College Thiagarajar College

**தினத் தந்தி** DAILY THANTHI
வெல்க தமிழ்

**07-06-2023** பக்கம்.எண்:3

# Thiagarajar College

Madurai-09, Tamil Nadu, India

## THIAGARAJAR COLLEGE ALUMNI ASSOCIATION

CONGRATULATIONS TO
STUDENTS, TEACHERS, ALUMNI, MANAGEMENT &
WELL WISHERS FOR ACHIEVING

## 18th Rank in NIRF 2023



Through consistent efforts in improvising the quality of education,
Thiagarajar College secured 18th rank (in all india level)
in NIRF rankings 2023.
We re-dedicate ourselves in achieving
excellence in education.

dinamani
www.dinamani.com
07-06-2023 பக்கம்.எண்:3

# Thiagarajar College

Madurai-09, Tamil Nadu, India

## THIAGARAJAR COLLEGE ALUMNI ASSOCIATION

CONGRATULATIONS TO
STUDENTS, TEACHERS, ALUMNI, MANAGEMENT &
WELL WISHERS FOR ACHIEVING

## 18th Rank in NIRF 2023




Through consistent efforts in improvising the quality of education, Thiagarajar College secured 18th rank (in all India level) in NIRF rankings 2023.
We re-dedicate ourselves in achieving excellence in education.

**THE HINDU**

**08-06-2023 Page No-5**

**16ஆம் நாள் நினைவு அஞ்சலி**

மனித நேயத்தின் உயிர்
கல்விச் சேவையின் கண்







## மேன்மைமிகு கருமுத்து தி.கண்ணன்

Chairman
Thiagarajar College of Engineering

ஆழ்ந்த துயரத்தில் வாடும் உள்ளங்கள்

**TCE Alumni 1975 - 80 Batch**

THE HINDU

**9-05-2023** **Pg No: 3**

# Thiagarajar College

Madurai-09, Tamil Nadu, India

## THIAGARAJAR COLLEGE ALUMNI ASSOCIATION

CONGRATULATIONS TO
STUDENTS, TEACHERS, ALUMNI, MANAGEMENT &
WELL WISHERS FOR ACHIEVING

## 18th Rank in NIRF 2023




Through consistent efforts in improvising the quality of education, Thiagarajar College secured 18th rank (in all India level) in NIRF rankings 2023.
We re-dedicate ourselves in achieving excellence in education.

DINAMALAR

**12-06-2023** பக்கம் எண்: 4

தியாகராஜர் கல்லூரி மாணவர்களுக்கு படிப்பிடைப்பயிற்சி: காந்தி மியூசியம், மதுரை, தலைமை: காந்தி மியூசியம் காப்பாட்சியர் நடராஜன், பங்கேற்பு: காந்திய ஆராய்ச்சி அலுவலர் தேவதாஸ், ஏற்பாடு: காந்தி மியூசியம், காந்திய சிந்தனைக் கல்லூரி, காலை 10:30 மணி.

DINAMALAR

**13-06-2023** பக்கம் எண்: 4

தியாகராஜர் கல்லூரி மாணவர்களுக்கு படிப்பிடைப் பயிற்சி: காந்தி மியூசியம், மதுரை, தலைமை: காந்தி மியூசியம் காப்பாட்சியாளர் நடராஜன், தலைப்பு: வரலாற்றில் அரங்காட்சியகத்தின் பங்கு, பங்கேற்பு: காப்பாட்சியர் மருது பாண்டியன், ஏற்பாடு: காந்தி மியூசியம், காலை 10:30 மணி.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
15-06-2023 பக்கம்.எண்:4



↑ காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் நடந்த கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்.

### காந்தி அருங்காட்சியகத்தில்

# காந்திய தமிழ்- மராட்டி சங்கமம்

● மதுரை

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில், தியாகராசர் கல்லூரி மூன்றாம் ஆண்டு தமிழ் துறை மாணவர்களுக்கும் மகாராஷ்டிரா காந்திய குழுவினருக்கும் இடையேயான கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரை வானொலியின் முன்னாள் முதுநிலை அறிவிப்பாளர் ஞானசம்பந்தன் "காந்தியடிகளின் சொல்லும் பொருளும்" என்னும் தலைப்பில் பேசினார். மகாராஷ்டிரா குழுவின் பொறுப்பாளரும், காதி நிபுணருமான பிரகத் நிமாடி " மாணவர்களிடையே காந்தியடிகள், வினோபா சிந்தனைகள் குறித்து பேசினார். அதன்பின் தமிழ்நாடு, மகாராஷ்டிரா குறித்த கலந்துரையாடல், கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது.

காந்தி நினைவு அருங்காட்சியக காப்பாட்சியர் நடராஜன் நிகழ்ச்சியில் மொழிபெயர்ப்பாளராக ஒருங்கிணைத்தார். அருங்காட்சியகத்தின் ஆராய்ச்சி அலுவலர் முனைவர் ஆர். தேவதாஸ், மகாராஷ்டிரா குழுவின் சார்பாக பருத்தி ஆராய்ச்சியாளர் சந்தோஷ் நிமாடே, சந்திர பிரபா, ருபாலி, நேசிகேத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை காந்தி நினைவு அருங்காட்சியகத்தின் செயலாளர் கே.ஆர்.நந்தாராவ் செய்திருந்தார்.

**தினமலர்**
**DINAMALAR**

**15-06-2023** பக்கம் எண்: 4

மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்வு: தருமபுர ஆதின சொக்கநாதர் மண்டபம், வடக்குமாசி வீதி, மதுரை, பங்கேற்பு: தலைவர் சந்திரசேகர், தொழில் வர்த்தக சங்கத்தலைவர் ஜெகதீசன், வி.எச்.பி., இணைப் பொதுச்செயலாளர் ஸ்தாணுமாலயன், நகரத்தார் சங்கத் தலைவர் சிதம்பரம், ஏற்பாடு: திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையம், மாலை 6:00 மணி.

**தினமலர்**
**DINAMALAR**

**16-06-2023** பக்கம் எண்: 4

தியாகராஜர் கல்லூரி மாணவர்களுக்கு படிப்பிடைப் பயிற்சி: காந்தி மியூசியம், மதுரை, ஏற்பாடு: தமிழ்த் துறை, காந்தி மியூசியம், மதுரை, தலைப்பு: மாற்று மருத்துவ முறைகள், பேசுபவர்கள்: அன்புச்செல்வி, பிரியா, ஏற்பாடு: காந்தி மியூசியம், காலை 10:30 மணி.

தினமலர்
DINAMALAR
16-06-2023 பக்கம் எண்: 4



■ மதுரையில் திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையம் சார்பில் மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் வலமிருந்து மைய தலைவர் சந்திரசேகரன், விஸ்வ ஹிந்து பரிஷத் இணை பொதுச்செயலாளர் ஸ்தாணுமாலயன், நகரத்தார் சங்கத் தலைவர் சிதம்பரம், தொழில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன், பேராசிரியர்கள் அருணகிரி, வாசுதேவன், மைய அமைப்பாளர் முருகேசன்.

# கருமுத்து கண்ணன் நினைவேந்தல்

**மதுரை, ஜூன் 16 –** மதுரையில் திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையம் சார்பில் மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது. வி.எச்.பி., அகில இந்திய இணை பொதுச் செயலாளர் ஸ்தாணுமாலயன் பேசினார். மைய தலைவர் சந்திரசேகரன், தொழில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன், நகரத்தார் சங்கத் தலைவர் சிதம்பரம், பேராசிரியர்கள் அருணகிரி, வாசுதேவன் ஆகியோர் கருமுத்து கண்ணனுடன் தங்களுக்கு இருந்த நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். அமைப்பாளர் முருகேசன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

தினமலர்
DINAMALAR
17-06-2023 பக்கம்.எண்:3

# Thiagarajar College

An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University
139 & 140, Kamarajar Salai, Teppakulam, Madurai - 625 009, Tamil Nadu

74th Since 1949

Website : www.tcarts.in E-mail : principaltcarts@gmail.com Phone: 0452 - 2311875

'A++' Grade in IV cycle of NAAC Accrediation Ranked 18th in nirf 2023

## WANTED

### ASSISTANT PROFESSORS (SELF FINANCED) IN THE FOLLOWING DEPARTMENTS

1) Tamil 2) Business Administration 3) Mathematics 4) Microbiology
5) Computer Science 6) Chemistry 7) Biotechnology

### LAB ASSISTANT (SELF FINANCED) IN THE FOLLOWING DEPARTMENTS

1) Botany 2) Zoology & Microbiology 3) CA & IT 4) Biotechnology

### QUALIFICATIONS:

Assistant Professors (Self financed) : 55% in PG degree in the respective subject with Ph.D (or) 55% in PG degree in the respective subject with NET/SLET/SET

Lab Assistant (Self financed) : B.Sc., Degree in the respective department

**Applications should be downloaded from the College website www.tcarts.in**

Zipped file with scanned filled-in applications with supportive documents should be mailed to admission@tcarts.in on or before 23.06.23, file name must be department name_applicant name. Interview will be offline.

Place : Madurai
Date : 17.06.2023

K. THIAGARAJAN, Secretary

**தினமலர்**
**DINAMALAR**

**18-06-2023** பக்கம்.எண்:7

# தியாகராஜர் கல்லூரி தேர்வு முடிவு வெளியீடு

**மதுரை, ஜூன் 18–** மதுரை தியாகராஜர் கல்லூரியில் ஏப்ரல் 2023 பருவத்திற்கான முதுநிலை, இளநிலை, சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்புகளின் (தனி தேர்வர்கள் உட்பட) அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நடந்த தேர்வுமுடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முடிவுகளை www.tcarts.in என்ற இணையத்தில் அறியலாம். மறுமதிப்பீடு, மறுகூட்டல், விடைத்தாள்நகலுக்கு விண்ணப்பித்தல் போன்ற விவரங்களும் இணையத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்வாணையர் மோகன் தெரிவித்துள்ளார்.

**தினமலர்**
**DINAMALAR**

**23-06-2023** பக்கம் எண்: 4

மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணனுக்கு நினைவேந்தல்: தியாகராஜர் கல்லூரி, மதுரை, தலைமை: தலைவர் விஸ்வநாதன், பேசுபவர்கள்: முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன், முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ, நெகிழ்வுரை: ஹரிதியாகராஜன், ஏற்பாடு: தமிழயக்கம், மாலை 4:00 மணி.

24-06-2023 பக்கம் எண்: 7



கருமுத்து கண்ணன் நினைவேந்தல் கூட்டத்தில், அவரது உருவப் படத்துக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு, பழ.நெடுமாறன், வைகோ உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தியபோது எடுத்த படம்.

# கருமுத்து கண்ணன் நினைவேந்தல் கூட்டம்

## அமைச்சர்-தலைவர்கள் பங்கேற்பு

மதுரை, ஜூன்.24-

மதுரை தியாகராஜர் கலை, அறிவியல் கல்லூரியில் தமிழியக்கம் சார்பில் கல்வியாளரும், மீனாட்சி அம்மன் கோவில் முன்னாள் தக்காருமான கருமுத்து கண்ணன் நினைவேந்தல் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. தமிழியக்க நிறுவனரும், தலைவருமான விஸ்வநாதன் தலைமை தாங்கினார். இதில், அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

அப்போது அவர்கள் பேசுகையில், "நாட்டின் வளர்ச்சிக்கு கல்வியும், தொழிலும் மிக அவசியம். இதனை வலியுறுத்தி எண்ணற்ற ஏழை, எளிய மக்களுக்கு கல்வியையும், வேலைவாய்ப்பினையும் வழங்கியவர் கருமுத்து கண்ணன். எனவே, கல்விக் கொடை மூலம் சிறப்பு பெற்ற தியாகராஜர் பெயரில் உள்ள அனைத்து கல்வி நிலையங்களையும் ஒருங்கிணைத்து, பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும்" என்றனர்.

இந்த கூட்டத்தில், எம்.எல்.ஏ.க்கள் நயினார் நாகேந்திரன், ஆர்.பி. உதயகுமார், எம்.பி.க்கள் சு.வெங்கடேசன், கார்த்தி சிதம்பரம், பா.ஜ.க. மாநில பொதுச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று பேசினர். முடிவில், கருமுத்து கண்ணனின் மகனும், தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியின் செயலருமான ஹரி தியாகராசன் நெகிழ்வுரை வழங்கினார்.

இந்த கூட்டத்தில், எம்.எல்.ஏ.க்கள் கோ.தளபதி, பூமிநாதன், தமிழியக்க பிரதிநிதிகள், தமிழார்வலர்கள், பேராசிரியர்கள், கல்லூரி பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்

# ரூ.1 கோடியே 75 லட்சம் உண்டியல் வசூல்

மதுரை, ஜூன்.24-

தினமணி
www.dinamani.com

24-06-2023 பக்கம் எண்: 12

# கல்வியாளர் கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல் கூட்டம்

## அமைச்சர், அரசியல் கட்சி பிரமுகர்கள் பங்கேற்பு



மதுரை தெப்பக்குளம் தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கருமுத்து தி. கண்ணன் உருவப் படத்துக்கு மரியாதை செலுத்திய தமிழக நிதி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டோர்.

தினமலர்
DINAMALAR
24-06-2023 பக்கம் எண்: 5

# தியாகராஜர் கல்வி குழுமங்களை பல்கலையாக மாற்ற வேண்டும்

## மீனாட்சி கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தலில் வலியுறுத்தல்

மதுரை, ஜூன் 24 -

'மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவாக, தியாகராஜர் கல்வி குழுமங்களை இணைத்து பல்கலையாக மாற்ற வேண்டும்' என அவரது நினைவேந்தல் நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி இயக்குநர், தியாகராஜர் கலை கல்லூரி தலைவர், தொழிலதிபர், சமூக சிந்தனையாளர் என பன்முகம் கொண்ட கருமுத்து கண்ணன், 70, ஒரு மாதத்திற்கு முன் காலமானார். அவரது நினைவாக தெற்கு தியாகராஜர் கல்லூரியில் தமிழ் பக்கம் சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது.

அதன் நிறுவனரும், வி.ஐ.டி., பல்கலை வேந்தருமான விசுவநாதன் தலைமை வகித்து பேசுகையில், "தொழில், கல்வி, தமிழ் வளர்ச்சி சின்னமாக கருமுத்து கண்ணன் இருந்தார். அவரது குடும்பம் தமிழுக்காக வாழும் குடும்பம். ஒரு நாடு முன்னேற கல்வி, தொழில் வளர்ச்சி முக்கியம் என்பதை உணர்ந்து வாழ்ந்தவர்" என்றார்.

அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில், "மதுரை - தூத்துக்குடி தொழில் வழித்தடத்திற்கு வித்திட்டவர் கண்ணன். ஆட்களை மதிப்பிட்டு செய்வதில் வல்லவர். தரம், தகுதியில் அவர் என்றும் சமரசம் செய்து கொண்டதில்லை. 18 ஆண்டுகளாக மீனாட்சி அம்மனிடம் இருந்து செங்கோல் வாங்கிய ஒரே நபர் இவர்தான்" என்றார்.

முன்னாள் அமைச்சர் உதயகுமார் பேசுகையில், "ஒரு மனிதன் ஒரு துறையில் வெற்றி பெறுவது அபூர்வமல்ல என்பதல்ல. ஆனால் கண்ணன் பல துறைகளிலும் வெற்றி கண்டவர். மனிதநேயமிக்கவர். தென்மாவட்ட வளர்ச்சிக்கு பங்காற்றியவர். அவர் மதுரையின் சொத்து" என்றார்.

ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ பேசுகையில், "கண்ணன் மறைவு மதுரைக்கும், மீனாட்சி கோயிலுக்கும் இழப்பு. இப்படி ஒரு தக்காரை எந்த கோயிலும் பெற்றிருக்க முடியாது. மக்கள் மனதில் வாழும் அவருக்கு மரணமில்லை" என்றார்.

கார்த்தி எம்.பி., பேசுகையில், "நவீனத்தையும், பாரம்பரியத்தையும் இணைத்து வாழ்ந்தவர். தொழிலில் சாதித்து காட்டியவர்.

முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா இருவரையும் விட்டுக் கொடுக்காமல் பழகியவர். அவர் வாழ்வு பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார். நானும், அவரும் சந்திக்கும்போது ஜோதிடம் குறித்து பேசுவோம்" என்றார்.

கண்ணன் மகன் ஹரி தியாகராஜன் பேசுகையில், "அறத்தில் வாழ்ந்து அதில் கிடைக்கும் பொருளை வைத்து இன்பம் காண வேண்டும் என தந்தை அடிக்கடி சொல்வார். வள்ளுவன் வழி வாழ்ந்தவர். ஜவுளி தொழிலில் புரட்சி செய்து சாதித்து ஆலை நிர்வாக முதன்மையாளராக திகழ்ந்தார்.

வருமானத்தின் ஒரு பகுதியை ஆரம்ப காலம் முதலே கல்வி சேவைக்காக ஒதுக்கியவர். பன்னோக்கு பார்வையாளர், சிந்தனையாளர். அவர் வழியில் நாங்கள் செல்வோம்" என்றார்.

கூட்டத்தில் பேசிய பலரும், தியாகராஜர் கல்வி குழுமங்களை இணைத்து கண்ணன் நினைவாக பல்கலையாக மாற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், எம்.பி., வெங்கடேசன், பா.ஜ., எம்.எல்.ஏ., நயினார் நாகேந்திரன், எம்.எல்.ஏ.,க்கள் தளபதி, பூமிநாதன், பா.ஜ., மாநில செயலாளர் சீனிவாசன், தமிழறிஞர்கள் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் வி.ஐ.டி., பல்கலை வேந்தர் விசுவநாதன் பேசினார். இடமிருந்து முன்னாள் அமைச்சர் உதயகுமார், தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன், கருமுத்து கண்ணன் மகன் ஹரி தியாகராஜன், அமைச்சர் தங்கம் தென்னரசு, ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
24-06-2023 பக்கம் எண்: 4



↑ நினைவேந்தலில் பங்கேற்ற அமைச்சர் தங்கம் தென்னரசு, வைகோ, பழ.நெடுமாறன், விஐடி வேந்தர் விசுவநாதன், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

# கருமுத்து தி.கண்ணன் எல்லோரிடத்திலும் வாழ்கிறார்

## அமைச்சர் தங்கம் தென்னரசு புகழஞ்சலி

● மதுரை

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் முன்னாள் தக்கார் கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சி தியாகராசர் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று நடந்தது. விஐடி பல்கலைக்கழக வேந்தர், தமிழியக்கத் தலைவர் கோ.விசுவநாதன் தலைமை வகித்தார். மாநில செயலர் குமார் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் நிதி அமைச்சர் த.தங்கம் தென்னரசு பேசுகையில், பன்முகம் கொண்ட ஒருவரை இழந்துள்ளோம். 18 ஆண்டுகள் மீனாட்சி அம்மன் செங்கோல் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர்.

அவர் இல்லை என்றாலும், எல்லோரிடத்திலும் வாழ்கிறார் என்றார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் பேசும்போது, 'அழிபவருக்கு அப்பாற்பட்டவர் கருமுத்து கண்ணன். அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கியவர். தியாகராசர் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளை ஒருங்கிணைத்து தியாகராசர் பெயரில் பல்கலைக்கழகம் உருவாக மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே கண்ணனுக்கு செலுத்தும் சிறந்த அஞ்சலி' என்றார்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசும்போது, மறைந்த கருமுத்து தி.கண்ணன் நட்புக்கு இலக்கணமானவர். நடுநிலை தவறாதவர். அவரது மறைவு மதுரைக்கு இழப்பு. அவரது கல்விக் குழுமம் பல்கலைக்கழகமாக மாற வேண்டும்' என்றார்.

முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசுகையில், 'அதிகாரத்தில் இல்லாதபோதும், பெரிதும் பிறரை மதிக்கக்கூடியவர்' என்றார்.

கல்லூரிச் செயலர் உ.ஹரி தியாகராசன் ஏற்புரையில், 'இங்கு அனைத்து கட்சியினரும் சேர்ந்து தந்தைக்கு புகழஞ்சலி செலுத்தி, அவரது ஆற்றல் தன்மையை எடுத்துக் கூறியுள்ளனர். அவர் இட்ட பாதையில் செல்வோம்' என்றார். இந்த நிகழ்வில், எம்.பி.க்கள் கார்த்தி சிதம்பரம், சு.வெங்கடேசன், எம்எல்ஏக்கள் கோ.தளபதி, பூமிநாதன், நயினார் நாகேந்திரன், பாஜக மாநில பொதுச்செயலாளர் ஸ்ரீனிவாசன், தமிழியக்க நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக மேடையில் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**THE HINDU**

**24-06-2023 Page No.: 2**

# Political party leaders pay homage to industrialist Karumuttu T. Kannan

The Hindu Bureau
MADURAI



MDMK leader Vaiko paying respect to the portrait of Karumuttu T. Kannan at a condolence meeting at Thiagarajar College in Madurai on Friday. G. MOORTHY

Leaders of various political outfits paid rich tributes to late industrialist Karumuttu T. Kannan, who died on May 23, here on Friday.

Tamizhiyakkam, a forum of which Karumuttu Kannan was the vice-president, organised a condolence meeting at Thiagarajar College. Vellore Institute of Technology Chancellor and Tamizhiyakkam founder-cum-president G. Viswanathan presided.

Speakers, led by Tamizhar Desiya Iyakkam president Pazha Nedumaran, wanted an university to be named after late Karumuttu Thiagarajan Chettiar, who founded the educational institutions in Madurai. He appealed to the Union and State governments to approve the establishment of the university.

MDMK general secretary and Rajya Sabha member Vaiko said Kannan was a multifaceted personality, who would be remembered for long years for his rich contributions to industry, academic and society. His simplicity and hard work had made him a stalwart.

State Finance Minister Thangam Thennarasu said Kannan had sown the seeds for Madurai-Thoothukudi Industrial Corridor. Mr. Thennarasu, who was the Industries Minister, recalled conversations he had with Kannan on the need to establish more industries in south Tamil Nadu.

Congress MP Karti Chidambaram said his family had been close to Kannan's family for over two generations. Describing Kannan as a 'Renaissance Man', the MP said his approach in business was modern, but he never forgot tradition and values.

BJP MLA and former Minister Nainar Nagendran said the educational institutions founded by Thiagarajan Chettiar were not commercialising education, and they opened the gates to many deserving students, irrespective of their economic background.

Mr. Nagendran said when he was not a Minister he approached Kannan and sought college admission for a student. Kannan said, "If you were a Minister, I could have denied. But now I will somehow try to accommodate your request since you are not in political power." And he obliged, he added.

Former AIADMK Minister, MLA and alumnus of Thiagarajar College R.B. Udayakumar said the rapport Kannan had with the government, whether it was formed by the DMK or the AIADMK, enabled him to continue as Meenakshi Sundareswarar Temple's Fit Person for 18 years.

MP Su. Venkatesan said Kannan had many roles and tasks in his life. In everything he did, he was perfect and also successful. His passion for Tamil and Tirukkural had touched the hearts of many people in the literary world.

BJP State general secretary R. Srinivasan said this group of colleges did not collect anything for appointment of teachers and non-teaching staff. Thiagarajar College conducted Saiva Siddhantha classes for willing students for a fortnight every year by giving them free boarding and lodging.

Hari Thiagarajan said the tradition and legacy of his father and grandfather would be taken forward in all their institutions.

தினமலர்
DINAMALAR
25-06-2023 பக்கம்.எண்:7



THE NEW INDIAN EXPRESS

26-06-2023 Pg No: 2

# Madurai student selected to play for India in int'l cricket tourney for blind

JEYALAKSHMI RAMANUJAM
@ Madurai

AN alumnus of Thiagarajar Arts and Science College, S Maharaja has been selected to the Indian men's cricket team, who will participate in the International Blind Sports Federation (IBSA) World Games in Birmingham 2023, which will be held from August 18 to 27.



S Maharaja

S Maharaja, hails from Duraisamy Puram village in Ottapidaram taluk in Thoothukudi district. He had partial vision till he was in Class 3. After he lost his eyesight completely, he studied at the Anne Jane Askwith Higher Secondary School for the visually impaired in Palayamkottai, where he was encouraged to take part in blind cricket when he was in Class 4.

As his journey continued into the later years, he was selected into the Indian team and became the first person from Tamil Nadu to represent India under the [illegible] category of B1.

Speaking to *TNIE*, S Maharaja said he started practicing cricket in his childhood and got selected into the Tamil Nadu team while he was studying in Class 11. "In Class 12, I secured 521/600 and joined BA English at the Thiagarajar Arts and Science College, where I was encouraged to pursue my sports career. For the past four years, I have represented Tamil Nadu and showcased my best performance, which even helped my team bring home the Nagesh trophy," he said.

"I used to practice four hours regularly. College authorities encouraged visually impaired students by allowing them to torch the light at sports events, providing them with travelling allowances, and exempting them from classes for practice," he said.

"I faced a lot of challenges in getting sponsorship in sports events. Though I have now been selected to represent World Games for Blind, I have to arrange the necessary kits, including food and other things on my own. People need to support visually impaired cricket players on par with normal cricket players," he added.

He requested Chief Minister MK Stalin and Minister for Sports Udhayanidhi Stalin to extend support to visually impaired cricket players and offer them government jobs as an encouragement, and to help them continue their sports career.

"Maharaja is an excellent left-arm bowler and he is an expert in batting too. He has brought laurels to our college at many national events, and won the 'Man of the Match' award in many games," Thiagarajar College Physical Education Director R Selvakumar said.

**தினமணி**
www.dinamani.com

**29-06-2023** பக்கம்.எண்:2

# தியாகராஜர் கல்லூரியில் ஆய்வு மன்றக் கருத்தரங்கு

**மதுரை, ஜூன் 28:** மதுரை தியாகராஜர் கல்லூரியில் தமிழ்த் துறை ஆய்வு மன்றக் கருத்தரங்கு புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் தமிழ்த் துறை சார்பில், பண்டித தமிழ்மணி அரங்கில் நடைபெற்ற கருத்தரங்குக்கு தமிழ்த் துறைத் தலைவர் இராம மலர்விழி மங்கையர்க்கரசி தலைமை வகித்தார். கருத்தரங்கை முதுகலை இரண்டாமாண்டு மாணவர் சு.மாதவன் தொகுத்து வழங்கினார். கருத்தரங்கில் மாணவி கா.மரகதமனோகரி 'பாண்டிய நாட்டைச் சேர்ந்த நாயன்மார்களின் பக்திச் சுவை' என்ற தலைப்பிலும், மாணவி ச.நாகநந்தினி 'புறநானூற்று பொதுவியல் திணையில் நிமித்தங்கள்' என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். தொடர்ந்து மாணவி ரா.வீரவள்ளி 'லியோ டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு' என்ற நூலை அறிமுகம் செய்து விமர்சன உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ஆய்வுமன்ற ஒருங்கிணைப்பாளர்கள் தா.முத்தமிழ், பா.அன்பரசி, தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் பங்கேற்றனர். முன்னதாக, மாணவர் செ.காவேரி பாலன் வரவேற்றார். கருத்தரங்கின் முடிவில் ம.பூபதி நன்றி கூறினார்.

தமிழால் இணைவோம்
**இந்து தமிழ் திசை**

**30-06-2023** பக்கம் எண்: 4

சைவ சித்தாந்தச் சொற்பொழிவு, தியாகராசர் கல்லூரி, தலைப்பு–சைவத்தின் அணையா விளக்கு, பேசுபவர்–முன்னாள் முதல்வர் சி.எஸ்.விசாலாட்சி, வைரவிழா அரங்கம், காலை 10.30.

தமிழால் இணைவோம்

**இந்து தமிழ் திசை**

**01-07-2023** பக்கம்.எண்:3



மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசினார் தமிழ்த் துறைத் தலைவர் ராம.மலர்விழி மங்கையர்க்கரசி.

## தியாகராசர் கல்லூரியில் சைவ சித்தாந்த சொற்பொழிவு

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் சைவ சித்தாந்த சொற்பொழிவு நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பாண்டியராஜா தலைமை வகித்தார். தமிழ்த் துறைத் தலைவர் ராம. மலர்விழி மங்கையர்க்கரசி வரவேற்றார். பேராசிரியர் விசாலாட்சி 'சைவத்தின் அணையா விளக்கு' என்ற தலைப்பில், மறைந்த கருமுத்து தி.கண்ணன் சைவத்துக்கு ஆற்றிய சேவையை எடுத்துக் கூறினார்.

தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முத்தமிழ் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். உதவிப் பேராசிரியர் கார்த்திக் குமரன் நன்றி கூறினார்.

**தினமலர்**

**DINAMALAR**

**01-07-2023** பக்கம்.எண்:5

## சைவ சிந்தாந்த சொற்பொழிவு

மதுரை தியாகராஜர் கல்லூரியில் சைவ சித்தாந்த சொற்பொழிவு முதல்வர் பாண்டியராஜா தலைமையில் நடந்தது. தமிழ்த்துறை தலைவர் மலர்விழி மங்கையர்கரசி வரவேற்றார். பாத்திமா கல்லூரி முன்னாள் துணை முதல்வர் விசாலாட்சி சைவத்தின் அணையா விளக்கு என்ற தலைப்பில் பேசினார். கருமுத்து கண்ணன் சைவத்திற்கு செய்த சேவையை எடுத்துரைத்தார். உதவி பேராசிரியர் முத்தமிழ் ஒருங்கிணைத்தார். உதவி பேராசிரியர் கார்த்திக்குமரன் நன்றி கூறினார்.

தமிழால் இணைவோம்

# இந்து தமிழ் திசை

**02-07-2023** பக்கம்.எண்:5







ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துடன் இணைந்து 'இந்து தமிழ் திசை' வழங்கும்

# 'அன்பாசிரியர்-2022' விருதுக்கான இறுதிக்கட்ட நேர்காணல்

- திருச்சி, கோவை, மதுரை மண்டல ஆசிரியர்கள் பங்கேற்பு

மதுரை

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்துடன் இணைந்து 'இந்து தமிழ் திசை' வழங்கும் 'அன்பாசிரியர்-2022' விருதுக்கான இறுதிக்கட்ட நேர்காணல் மதுரை 'இந்து தமிழ் திசை' நாளிதழ் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

3 மண்டலங்களுக்கு உட்பட்ட 27 மாவட்டங்களிலிருந்து 55 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

[illegible]

தினமணி
www.dinamani.com

04-07-2023 பக்கம் எண்: 4

**தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு:** கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல், தியாகராஜர் கல்லூரி, காமராஜர் சாலை, மாலை 4.30.

தினமலர்
DINAMALAR

04-07-2023 பக்கம் எண்: 4

மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் மறைவுக்கு நினைவஞ்சலி நிகழ்ச்சி: ராதா தியாகராஜர் அரங்கம், தியாகராஜர் கல்லூரி, மதுரை, பங்கேற்பு: பி.எஸ்.ஒய்., கல்விக்குழும நிர்வாக இயக்குநர் வரதராஜன், தமிழ்நாடு சுயநிதி பொறியியல் கல்லூரி மற்றும் கலை அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு தலைவர் முனிரத்தினம், வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் தலைவர் முத்துராமலிங்கம், ஏற்பாடு: தமிழ்நாடு சுயநிதி பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, மதுரை காமராஜ் பல்கலை சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, மாலை 4:30 மணி.

தினமலர்
DINAMALAR

**05-07-2023** பக்கம்.எண்:4

# கருமுத்து கண்ணன் நினைவேந்தல்

**மதுரை, ஜூலை 5–**

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார், தியாகராஜர் கல்லுாரிகளின் தாளாளர் கருமுத்து கண்ணன் மறைவைத் தொடர்ந்து நேற்று நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது.

தமிழ்நாடு சுயநிதி பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லுாரிகளின் கூட்டமைப்பு, மதுரை காமராஜ் பல்கலை சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லுாரிகளின் கூட்டமைப்பு சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு வேலம்மாள் கல்வி நிறுவனங்களின் தலைவர் முத்துராமலிங்கம் தலைமை வகித்தார்.

சுயநிதி பொறியியல், கலை அறிவியல் கல்லுாரிகள் கூட்டமைப்பு தலைவர் முனிரத்தினம் முன்னிலை வகித்தார். பி.எஸ்.ஓய்., கல்விக்குழும நிர்வாக இயக்குனர் வரதராஜன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன், மன்னர் திருமலை நாயக்கர் கல்லுாரி தலைவர் ராஜகோபால், திருச்சி இமயம் பொறியியல் கல்லுாரி தலைவர் செல்வராஜ், கே.எல்.என்., பொறியியல் கல்லுாரி தலைவர் கே.என்.கே.கார்த்திக், சாக்ஸ் எம்.ஏ.வி.எம்.எம்., பொறியியல் கல்லுாரி தலைவர் பாஸ்கரன், பி.டி.ஆர்., பொறியியல் கல்லுாரி தலைவர் தனவேலன் உட்பட பலர் பேசினர்.

கருமுத்து கண்ணன் மகன் ஹரிதியாகராஜன் நெகிழ்வுரை நிகழ்த்தினார்.



மதுரையில் தமிழ்நாடு சுயநிதி பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லுாரிகள் கூட்டமைப்பு சார்பில் நடந்த மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் அஞ்சலி செலுத்திய நிர்வாகிகள் வலமிருந்து ராஜகோபால், பாஸ்கரன், ஜெகதீசன், வரதராஜன், முத்துராமலிங்கம், ஹரி தியாகராஜன்.

தினமலர்
DINAMALAR
08-07-2023 பக்கம்.எண்:4

## தமிழ் ஆய்வு மன்றம்

மதுரை: தியாகராஜர் கல்லூரியில் தமிழ்த் துறை ஆய்வு மன்றக் கருத்தரங்கு இணைப் பேராசிரியர் காந்திதுரை தலைமையில் நடந்தது. மாணவர் முத்துமணி வரவேற்றார். 'அவ்வையின் நல்வழி பாடல்களில் பா மற்றும் தொடை விகற்பம்' என்ற தலைப்பில் மாணவி ராஜலட்சுமி, 'அவ்வையின் புறப் பாடல்களில் தத்தம் குறிப்பு உணர்த்தும் இடைச்சொற்கள்' என்ற தலைப்பில் மாணவி பில்லத்தாள் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். மாணவி ஆர்த்தி 'எழுத்தாளர் தொ.பரமசிவன் எழுதிய அறியப்படாத தமிழகம்' என்ற கட்டுரை தொகுப்பை நூல் அறிமுகம் செய்தார். ஆய்வு மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் முத்தமிழ், அன்பரசி பங்கேற்றனர். மாணவர்கள் தினேஷ்குமார், முருகன் தொகுத்து வழங்கினர்.

தினமணி
www.dinamani.com
09-07-2023 பக்கம்.எண்:6

# இந்த வாரம்

கலாரசிகன்





**தினமணி**
www.dinamani.com

## 13-07-2023 பக்கம் எண்:

# கருமுத்து தி. கண்ணன் நினைவேந்தல்

## மதுரையில் நாளை நடைபெறுகிறது

மதுரை, ஜூலை 12: மறைந்த தொழிலதிபரும், கல்வியாளருமான கருமுத்து தி. கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சி மதுரையில் உள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் பவள விழா ஹாட்சன் பேரவை அரங்கத்தில் வெள்ளிக்கிழமை (ஜூலை 14) மாலை நடைபெறுகிறது.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் சார்பில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை, சங்கத்தின் தலைவர் என். ஜெகதீசன் தொடங்கிவைக்கிறார். வணிக வரி, பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல், எண்ம சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்து, புகழுரையாற்றுகின்றனர். இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்புத் தலைவர் டி. ராஜ்குமார், இந்தியத் தொழில் வணிக கூட்டமைப்புத் தலைவர் பி.ஜி.எஸ். தினேஷ் டேவிட்சன், வேளாண் உணவு வர்த்தக மையத் தலைவர் எஸ். ரத்தினவேல் உள்பட பல்வேறு தொழில் அமைப்புகளின் நிர்வாகிகள், சேவைச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

நிறைவில், தியாகராஜர் கல்லூரிச் செயலாளர் கருமுத்து ஹரி தியாகராஜன் நெகிழ்வுரையாற்றுகிறார்.

தமிழால் இணைவோம்
**இந்து தமிழ் திசை**

## 15-07-2023 பக்கம் எண்: 16



# கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல் கூட்டம்

அமைச்சர்கள், வர்த்தக சங்கத்தினர் பங்கேற்பு

[illegible]

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**15-07-2023 பக்கம் எண்: 4**



மதுரை கோச்சடையில் உள்ள மறைந்த கருமுத்து தி.கண்ணன் வீட்டுக்குச் சென்று அவரது உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின். அருகில் அமைச்சர் துரை முருகன், கருமுத்து ஹரி தியாகராஜன் மற்றும் குடும்பத்தினர். படம்: ஜி.மூர்த்தி

# கருமுத்து தி.கண்ணன் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல்

மதுரை

மதுரையில் கலைஞர் நூலகத்தை நேற்று திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் பின்னர் இரவில் கோச்சடை பகுதியில் உள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரி முன்னாள் தலைவர் மறைந்த கருமுத்து தி.கண்ணன் வீட்டுக்கு சென்றார்.

அங்கு அவரது மகனும், தியாகராஜர் கலை, அறிவியல் கல்லூரி செயலருமான கருமுத்து ஹரி தியாகராஜன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் கருமுத்து தி.கண்ணனின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அமைச்சர்கள் துரை முருகன், ஐ.பெரியசாமி, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் உடன் சென்றனர். பின்னர், விமான நிலையம் சென்றடைந்த முதல்வர் சென்னை புறப்பட்டுச் சென்றார்.

தினமலர்
DINAMALAR

**15-07-2023 பக்கம் எண்: 3**



தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் சார்பில் நடந்த மீனாட்சி கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் இடமிருந்து முதுநிலை தலைவர் ரத்தினவேலு, தலைவர் ஜெகதீசன், அமைச்சர் மூர்த்தி, கண்ணன் மகன் ஹரி தியாகராஜன், அமைச்சர் தியாகராஜன், சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**15-07-2023 பக்கம் எண்: 6**

கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல்



தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம், தொழில் அமைப்புகளின் சார்பில் மதுரையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மறைந்த தொழிலதிபர் கருமுத்து தி.கண்ணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்று அஞ்சலி செலுத்தும் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் [illegible]

**15-07-2023 Page No.: 4**

# 'Karumuttu Kannan wanted Madurai to be a developed city'

The Hindu Bureau
MADURAI

Noted industrialist Karumuttu T. Kannan, who passed away here in May, was a multi-faceted personality who left his indelible impressions in the field of industry, education and spirituality, said Minister for Registration P. Moorthi.

Addressing at a condolence meeting organised by Tamil Nadu Chamber of Commerce and Industry here on Friday, Mr. Moorthi said that Kannan had a long association with Meenakshi Sundareswarar Temple as its Thakkar.

Stating that Kannan was a keen listener, Mr. Moorthi said that though he kept himself abreast of the developments around, he would lend ears to listen to what others had to say.

The departed industrialist always wanted to see Madurai a developed city.

Minister for Information Technology Palanivel Thiaga Rajan said that despite coming from an industrialist family, Kannan carved a niche for an identity for himself with his hard work and talent.

Mr. Thiaga Rajan also recalled the services of Kannan for Tamil development. President of Agro Food Chamber of Commerce and Industry S. Rethinavelu, president of Tamil Nadu Chamber of Commerce and Industry N. Jagatheesan, and secretary, Thiagarajar College, Hari Thiagarajan, were among those who spoke.



Minister P. Moorthi paying homage to the portrait of Karumuttu T. Kannan at a condolence meeting in Madurai on Friday. G. MOORTHY

தினமணி
www.dinamani.com

16-07-2023 பக்கம் எண்: 2

# தொழிலதிபர் கருமுத்து தி.கண்ணன் குடும்பத்தினருக்கு முதல்வர் ஆறுதல்



மதுரை கோச்சடையில் உள்ள மறைந்த கருமுத்து தி. கண்ணன் இல்லத்தில் அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், பழனிவேல் தியாகராஜன், பி. மூர்த்தி, இ. பெரியசாமி, கருமுத்து தி. கண்ணனின் குடும்பத்தினர்.

மதுரை, ஜூலை 15: மதுரையில் அண்மையில் மறைந்த தொழிலதிபர் கருமுத்து தி.கண்ணன் இல்லத்துக்கு சனிக்கிழமை சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் தக்காரும், தொழிலதிபருமான கருமுத்து தி.கண்ணன் அண்மையில் உடல்நலக்குறைவால் காலமானார்.

இந்த நிலையில், மதுரையில் சனிக்கிழமை நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழாவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் விழா முடிந்த பின்னர், கோச்சடை பகுதியில் உள்ள கருமுத்து தி.கண்ணன் வீட்டுக்குச் சென்றார்.

அங்கு கருமுத்து தி.கண்ணன் படத்துக்கு மலரஞ்சலி செலுத்திய முதல்வர், அவரது மகன் கருமுத்து ஹரி தியாகராஜன் உள்பட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதில் அமைச்சர்கள் துரைமுருகன், இ.பெரியசாமி, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

தினகரன்

16-07-2023 பக்கம் எண்: 16

மதுரையில்

# கருமுத்து கண்ணன் படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை



மதுரையில் அண்மையில் மறைந்த மீனாட்சி அம்மன் கோயிலின் முன்னாள் தக்கார் கருமுத்து கண்ணனின் இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்று அவரது உருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், ஐ.பெரியசாமி, பி.மூர்த்தி, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர்.

திருப்பரங்குன்றம், ஜூலை 16: மதுரை மீனாட்சி அம்மன் கோயில் முன்னாள் தக்காரும், பிரபல தொழிலதிபருமான கருமுத்து தி.கண்ணன் கடந்த மே 23ம் தேதி உடல்நலக்குறைவால் மரணமடைந்தார்.

இந்நிலையில் நேற்று கலைஞர் நூலக திறப்பு விழாவிற்கு மதுரை வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை கோச்சடையில் உள்ள கருமுத்து கண்ணன் இல்லத்திற்கு சென்று அவரது மனைவி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் கருமுத்து கண்ணன் உருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், ஐ.பெரியசாமி, பி.மூர்த்தி, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் இருந்தனர்.

தினமலர்
DINAMALAR
16-07-2023 பக்கம் எண்: 11



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் மறைந்த கருமுத்து கண்ணன் வீட்டிற்கு சென்ற முதல்வர் ஸ்டாலின் அவரது உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். வலமிருந்து கண்ணன் மனைவி உமா, மகன் ஹரி தியாகராஜன், அமைச்சர்கள் துரைமுருகன், தியாகராஜன், மூர்த்தி.

THE HINDU

16-07-2023 Page No.: 2

# Stalin recollects his association with industrialist Karumuttu Kannan

The Hindu Bureau
MADURAI



Chief Minister M. K. Stalin who paid homage to the portrait of industrialist Karumuttu T. Kannan at his residence in Madurai on Saturday. G. MOORTHY

Chief Minister M.K. Stalin on Saturday recollected his association with industrialist Karumuttu T. Kannan and his family members here on Saturday.

Accompanied by senior Ministers M. Durai Murugan, I. Periyasamy and K. Ponmudi, the Chief Minister visited Kannan's house in the city and offered condolences.

Mr. Stalin was away in Japan on an official tour when the industrialist passed away in Madurai in May.

Mr. Stalin went through an album of select photographs of Kannan along with former Chief Minister M. Karunanidhi and himself.

"Karunanidhi had visited our college twice – once for the golden jubilee celebration of Thiagarajar College of Engineering (TCE)," said Hari Thiagarajan, son of Kannan.

Mr. Stalin and Kannan had participated in the inauguration of an oxygen plant on the campus of Government Hospital for Thoracic Medicine at Thoppur near here, donated under the corporate social responsibility of Thiagarajar Mills.

Mr. Stalin had also released a book authored by Uma Kannan on the TCE last year in Chennai.

The last public meeting attended by Kannan was the inauguration of the photo exhibition of Mr. Stalin on his 70th birthday in Madurai.

"When he saw the photograph of the inaugural of the exhibition, Mr. Stalin recalled the phone call he had made to my father on that evening," he added.

The Chief Minister asked the family members to keep the good work of Kannan going.

Minister for Registration P. Moorthi and Minister for Information Technology Palanivel Thiaga Rajan, Ms. Uma Kannan, her daughter-in-law Abirami were present.

தினமலர்
DINAMALAR
27-07-2023 பக்கம்.எண்:4



தேசிய தரவரிசை பட்டியலில் மதுரை தியாகராஜர் கல்லூரி 15வது இடத்தை பெற்றதற்கான சான்றிதழை கல்லூரி தலைவர் ஹரி தியாகராஜனிடம் கவர்னர் ரவி வழங்கினார். இடமிருந்து சென்னை ஐ.ஐ.டி., இயக்குநர் காமகோடி, கல்லூரி முதல்வர் பாண்டியராஜா.

தினமலர்
DINAMALAR
28-07-2023 பக்கம் எண்: 4

ரத்ததான முகாம்: தியாகராஜர் கல்லூரி, மதுரை, தலைமை: முதல்வர் பாண்டியராஜா, பங்கேற்பு: அரசு மருத்துவமனை ரத்த வங்கித் தலைவர் சிந்தா, காலை 9:00 மணி.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

28-07-2023 பக்கம்.எண்:4

# தியாகராசர் கல்லூரியில் முத்தமிழ் மன்ற விழா

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் முத்தமிழ் மன்ற தொடக்க விழா, கலைத் திருவிழா நடைபெற்றன.

முத்தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் சங்கீத் ராதா வரவேற்றார். தமிழ்த் துறை தலைவர் ராம. மலர்விழி மங்கையர்க்கரசி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக கரகக் கலைஞர் புகழ் கலா பாரதி பங்கேற்று மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

முதலாம் ஆண்டு இளங்கலை தமிழ் மாணவர்களின் நாடகம், ஆன்மிக சொற்பொழிவு உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் நடந்தன. முத்தமிழ் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற விழாவில் பங்கேற்ற பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள்.

தினமலர்
DINAMALAR

11-08-2023 பக்கம்.எண்:2

# தேசிய நெல் திருவிழா

மதுரை, ஆக. 11 -

மதுரை தியாகராஜர் கல்லூரியில் தேசிய நெல் திருவிழா நடந்தது. 'கிரியேட்' அமைப்பும் கல்லூரி நிர்வாகமும் இணைந்து நடத்திய இவ்விழாவில், பாரம்பரிய நெல் வகைகளின் முக்கியத்துவம் குறித்து பேசப்பட்டது.

கிரியேட் அமைப்பின் தலைவர் துரைசிங்கம் பேசுகையில், "10 ஆண்டுகளாக நெல் திருவிழாவை நடத்தி வருகிறோம். அதன் மூலம் 12 வகையான பாரம்பரிய நெல் வகைகளை 42 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம். மாப்பிள்ளை சம்பா, தூய மல்லி, தங்க சம்பா முதலியவை இதில் அடக்கம். பாரம்பரிய நெல் விதைகளை பரவலாக்கியதன் மூலம் 200 வகையான நெல் வகைகள் மீட்டெடுக்கப்பட்டன," என்றார்.

முதல்வர் பாண்டியராஜா தலைமையில் விதை வங்கி அமைப்பது, நெல் வகைகளின் மருத்துவ குணங்களை ஆராய்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டனர். நபார்டு தலைமை அதிகாரி சுவோஷ்மூர்த்தி, கே.வி.கே. வேளாண் பல்கலை திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன், தாவரவியல் துறைத் தலைவர் கண்ணன் உடனிருந்தனர்.



மதுரை தியாகராஜர் கல்லூரி தாவரவியல் துறை சார்பில் நடந்த தேசிய நெல் திருவிழாவில் (வலதுஓரம்) முதல்வர் பாண்டியராஜா பாரம்பரிய நெல் விதைகளை கிரியேட் அமைப்பின் தலைவர் துரைசிங்கத்திடம் வழங்கினார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

11-08-2023 பக்கம்.எண்:3



மதுரை தியாகராசர் கல்லூரியில் நடந்த நெல் திருவிழாவில் விவசாயிகளுக்கு இலவசமாக பாரம்பரிய நெல் விதைகள் வழங்கப்பட்டன. படம்: நா.தங்கரத்தினம்

# தியாகராசர் கல்லூரியில் 17-வது தேசிய நெல் திருவிழா

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் தாவரவியல் துறை, மதுரை ரிரிபேட், நமது நெல்லை காப்போம் அமைப்பு சார்பில் 17-வது தேசிய நெல் திருவிழா மற்றும் இயற்கை வேளாண் விளைபொருள் வணிகத் திருவிழா நடைபெற்றது.

நமது நெல்லை காப்போம் அமைப்பு தலைவர் பி.துரைசிங்கம் தலைமை வகித்தார். தியாகராசர் கல்லூரி முதல்வர் டி.பாண்டியராஜா வரவேற்றார்.

மதுரை நபார்டு மற்றும் வேளாண் தொழில் முனைவோர் உருவாக்கும் மையத் தலைமை நிர்வாக அதிகாரி உ.கனேஷ்மூர்த்தி தொடங்கி வைத்தார்.

தாவரவியல் துறைத்தலைவர் கண்ணன், ரிரிபேட் திட்ட இயக்குநர் சுரேஷ்கண்ணா, தாவரவியல் துறைப் பேராசிரியர் வே.கார்த்திகேயன், மதுரை வேளாண் அறிவியல் நிலைய தலைவர் இ.சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர்.

இதில், இயற்கை விவசாயிகள் ம.அருணாச்சலம், நா.அலெக்ஸ் கருணாகரன், புவனேஸ்வரி என்ற பூங்குழலி, கருப்பையா, கார்த்திகேயன், ம.அருணாச்சலம் ஆகியோர் தாங்கள் விளைவித்த பாரம்பரிய நெல் ரகங்களை காட்சிப்படுத்தியிருந்தனர். தாவரவியல் துறை பேராசிரியர் வே.கார்த்திகேயன் தலைமையில் மாணவர்கள் குழுவினர் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று சேகரித்த 144 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் ரகங்களை பரவலாக்கும் வகையில் இலவசமாக நெல் விதைகள் வழங்கப்பட்டன. தாவரவியல் துறை பேராசிரியர் வே.கார்த்திகேயன் நன்றி கூறினார்.

தினமணி
www.dinamani.com
11-08-2023 பக்கம்.எண்:2

# 'இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் தேவை'

மதுரை, ஆக. 10: இளம் தலைமுறையினர் இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மதுரை தியாகராஜர் கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா வலியுறுத்தினார்.

மதுரை தியாகராஜர் கல்லூரி தாவரவியல் துறை, மதுரை விரிவேட் நமது நெல்லை காப்போம் அமைப்பு சார்பில் 17-ஆவது தேசிய நெல் திருவிழா, இயற்கை வேளாண் விளைபொருள்கள் வணிகத் திருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு விரிவேட் நமது நெல்லை காப்போம் அமைப்பின் தலைவர் பி. துரைசிங்கம் தலைமை வகித்தார். தியாகராஜர் கல்லூரி தாவரவியல் துறைத் தலைவர் து. கண்ணன் முன்னிலை வகித்தார்.

இதில் விவசாயிகளுக்குப் பாரம்பரிய நெல் விதைகளை வழங்கிய பின்னர், கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா பேசியதாவது:



மதுரை தியாகராஜர் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற 17-ஆவது தேசிய நெல் திருவிழாவில் பங்கேற்ற கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா உள்ளிட்ட விவசாயிகள்.

கல்வி, மருத்துவம், அறிவியல் ஆகிய துறைகள் மட்டுமன்றி, வேளாண் துறையிலும் நமது நாடு சாதனை புரிந்து வருகிறது. ஆரோக்கியம் பேண வேண்டுமெனில், இயற்கை முறையில் விளைவித்த பொருள்களை வாங்கிப் பயன்படுத்த முன்வர வேண்டும். பாரம்பரிய உணவுகள் குறித்து தற்போது பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

அதிக மகசூல் இல்லாதது, உரிய விலை கிடைக்காதது உள்ளிட்ட காரணங்களால் அதிகமான விவசாயிகள் இயற்கை வேளாண்மையைக் கைவிடுகின்றனர். இந்த நிலை மாற விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினர் இயற்கை வேளாண்மைக்கும், இதில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் மதுரை வேளாண் தொழில் முனைவோர் உருவாக்கும் மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சு.செல்வமூர்த்தி, கிருஷி விக்யான் கேந்திரா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இ.சுப்ரமணியன், விரிவேட் நமது நெல்லை காப்போம் அமைப்பின் திட்ட இயக்குநர் கே.சுரேஷ்கண்ணா ஆகியோர் இயற்கை வேளாண்மை குறித்து பேசினர்.

பின்னர், திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளர் ஜி.வெங்கடேஷ், இயற்கை வேளாண் ஆலோசகர் இளங்கோ கல்யாணம் ஆகியோர் பாரம்பரிய வேளாண்மை குறித்தும், வேளாண் விளை பொருள்களைப் பாதுகாப்பது குறித்தும் பேசினர். நிகழ்ச்சியில் தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் வேலுச்சாமி கார்த்திகேயன், விவசாயிகள், தன்னார்வலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




தினமணி P-11

செவ்வாய்க்கிழமை 29 ஆகஸ்ட் 2023

# கடித இலக்கிய முன்னோடி வள்ள

தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன்





## பிற மொழிகளிலும் தமிழ் நூல்கள்



தினமலர்
DINAMALAR

29-08-2023 பக்கம்.எண்:4

# வள்ளலார் தின கருத்தரங்கு

மதுரை, ஆக. 29–

மதுரை தியாகராஜர் கல்லூரியில் வள்ளலாரின் 200ம் ஆண்டு நினைத்தை முன்னிட்டு சாகித்ய அகாடமி, தமிழ்த் துறை சார்பில் கருத்தரங்கு துவங்கியது.

அகாடமிபொறுப்புஅலுவலர் சந்திர சேகரராஜூவரவேற்றார். கல்லூரி செயலாளர் ஹரிதியாகராஜன் தலைமை வகித்து, 'அன்பே சிவம் வள்ளலாரோடு பொருந்துவதை' கூறினார். அகாடமி தமிழ் ஆலோசனைக் குழுஒருங்கிணைப்பாளர் தாமோதரன் நோக்கம் குறித்து விளக்கினார்.டில்லி நேரு பல்கலை துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் ஆய்வு நூலைவெளியிட்டார்.

அவர் பேசுகையில், ''மதுரையில்மீனாட்சியின் ஆட்சி நடப்பது பெண்ணியத்திற்கு உதாரணம். வள்ளலார் வழங்கிய போதனைகள் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவையாக இருக்கும்' என்றார். முதல்வர் பாண்டியராஜா நன்றி கூறினார். தமிழ்த் துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி உள்பட பலர் பங்கேற்றனர்.

THE HINDU

29-08-2023 Pg No: 2

# Tamil Nadu has good educational system: JNU Vice-Chancellor

In different periods from time immemorial, Tamil language has been popular; saints like Vallalar stressed the need for unity, she says

The Hindu Bureau
MADURAI

Tamil Nadu had an egalitarian environment and a very good educational system, said Jawaharlal Nehru University Vice-Chancellor Santishree Dhulipudi Pandit here on Monday.



JNU Vice-Chancellor Santishree Dhulipudi Pandit speaking at Thiagarajar College in Madurai on Monday. G. MOORTHY

Speaking at the two-day seminar on "Vallalar - 200" organised by the Sakitya Akademi and the Department of Tamil, Thiagarajar College, she said that in different periods, from time immemorial, Tamil language has been popular. Saints like Vallalar had contributed not only towards language, literature and culture, but also on the need for unity and oneness. Such was the commitment by the stalwarts.

Ms. Santishree said that Chief Minister M.K. Stalin had contributed ₹5 crore as corpus fund towards the Tamil Chair in JNU last year and also another ₹5 crore this year. "We in JNU, conducted many events towards propagation of the language through the Special Centre for Tamil, since 2007," she added.

Hailing Sakitya Akademi for taking sustained efforts in promoting literature and language through seminars, she said that it was a good opportunity for the present generation to learn and equip themselves on Vallalar, who was a spiritual leader, poet, healer et al. The poet had left an indelible mark that the legacy should spread.

Presiding over the seminar, college secretary K. Thiagarajan said that students from the Tamil Department should go in-depth into the teachings of Vallalar and conduct research. The most noble *annadhanam* had a significant meaning among the mankind after Vallalar took to the masses.

Dinamani editor K. Vaithianathan delivered the keynote address. Tamil critic and professor G. Gnanasambandan, Sakitya Akademi secretary K. Sreenivasa Rao, Akademi's convenor Tamil Advisory Board R. Thamotharan, Principal D Pandiaraja also spoke.

The two-day seminar would have technical sessions in which resource persons and experts would address on Vallalar. Noted *pattimandram* moderator and professor Solomon Pappiah would deliver the valedictory address on Tuesday. A book expo was also open to the visitors on publications from the Sakitya Akademi.

தினமலர்
DINAMALAR

04-09-2023 பக்கம்.எண்:4



மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு அண்ணாமலை பல்கலை துணைவேந்தர் கதிரேசன் பட்டம் வழங்கினார். வலமிருந்து கல்லூரி செயலாளர் ஹரி தியாகராஜன், முதல்வர் பாண்டியராஜா.

# அறிவியல் தொழில் நுட்பம் சிவன் வழங்கிய வாள்

## துணைவேந்தர் கதிரேசன் வர்ணனை

மதுரை, செப். 4–

"அறிவியல் தொழில் நுட்பம் சிவன் வழங்கிய வாள் போன்றது" என, அண்ணாமலை பல்கலை துணைவேந்தர் கதிரேசன் வர்ணித்துள்ளார்.

மதுரை தியாகராஜர் கல்லூரி பட்டமளிப்பு விழா செயலாளர் ஹரி தியாகராஜன் தலைமையில் நடந்தது. இதில் அவர் பேசுகையில், "இந்தியாவின் சந்திரயான் 3 வெற்றிக்கு துணையாக

இருந்தவர்கள் சிறிய நகரங்களில் படித்தவர்களே. கொரோனாவுக்குப் பின் உலக நாடுகள் பொருளாதாரத்தில் திணறும் போது இந்தியா 7.8 சதவீத வளர்ச்சி பெற்றுள்ளது" என்றார். அண்ணாமலை பல்கலை துணைவேந்தர் கதிரேசன் பேசியதாவது:

பட்டங்களை பெற்றதும் மாணவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி செல்லவேண்டும். வாய்ப்புகள் நம்மைத் தேடி வருவதில்லை. நாம்தான் அவற்றைத் தேடிச் செல்ல வேண்டும்.

இருட்டில் பயணிக்கும்போது கையில் உள்ள டார்ச் சிறிய வெளிச்சமே தருகிறதென்று நின்றுவிடுவதில்லை. மாணவர்களும் அதேபோல் நகர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்.

போட்டியில் நீங்கள் அதிக புள்ளிகளில் வென்றாலும், எதிரணி சில புள்ளிகளாவது பெற்றிருக்கும். வாழ்க்கையும் அப்படித்தான் எந்த தோல்வியும் முழுமையானதல்ல. கல்வி என்பது அறிவோடு திறனையும் வளர்க்க வேண்டும்.

அறிவியல் ஆன்மிகத்தோடு இணைந்து செயல்பட வேண்டும்.

ராமாயணத்தில், சிவன் கொடுத்த வாளோடு போரிட்டாலும் ராவணனின் நோக்கம் தவறாயிருந்ததால் தோற்றான். அலைபேசி போன்ற அறிவியல் தொழில் நுட்பமும் சிவன் கொடுத்த வாள் போன்றது. அதனை மாணவர்கள் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும், என்றார். முதல்வர் பாண்டியராஜா உட்பட பலர் பங்கேற்றனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**04-09-2023** பக்கம்.எண்:3

# மதுரை தியாகராசர் கல்லூரியில் 38-வது பட்டமளிப்பு விழா

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற 38-வது பட்டமளிப்பு விழாவில், 1,500-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.எம்.கதிரேசன் பட்டங்களை வழங்கினார்.

கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவில், கல்லூரியின் செயலர் உ.ஹரி தியாகராஜன் வரவேற்றுப் பேசியதாவது: இந்திய நிலவின் தென் பகுதிக்கு சந்திரயான் விண்கலத்தை அனுப்பி சாதனை புரிந்துள்ளது. இச்சாதனையைப் புரிந்த விஞ்ஞானிகள் அனைவரும் இந்திய கல்விப் புலத்திலிருந்து வந்தவர்கள். வெளிநாடு வாய்ப்பு கிடைத்தும் நம்நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் இவர்களால் இன்று உலகம் இந்தியாவை வியப்புடன் பார்க்கிறது. இவற்றை கவனத்தில்கொண்டு பட்டதாரிகள் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்றார்.

விழாவில், மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.எம்.கதிரேசன் பேசியதாவது:

இளைஞர்கள் பெற்றிருக்கும் பட்டம்தான் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கைவிளக்கு. மருத்துவப்படிக்கவாய்ப்பினைதவறவிட்டிருந்தாலும், மருத்துவக் கல்லூரிகளின் ஆசிரியர்கள், துறைத் தலைவர்கள் அனைவரும் என்னிடம் அவரவர் துறையைச் சார்ந்து அறிக்கை அளிக்கின்றனர். எனவே, தோல்வியை கண்டு மனம் சோர்வடையக் கூடாது. உங்களுக்கான பாதை நீண்டிருக்கின்றது. தேர்ந்தெடுத்துச் செல்லுங்கள்.

முதன்முதலில் ஒரு குழந்தை இந்த உலகத்தை பள்ளிக்கூடத்தின் மூலமாகவே பார்க்கின்றது. வாழ்க்கையின் வெற்றியை நிர்ணயிப்பது கல்விக் கூடங்களே.

மேலும், அறநெறியில் பொருளீட்டுவதே உண்மையான வெற்றி. அதுவே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கத்துடன் கூடிய பட்டங்களும், 1,567 பட்டதாரிகளுக்கும் துணைவேந்தர் பட்டம் வழங்கினார்.

கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா பட்டதாரிகளுக்கான உறுதிமொழியை முன்மொழிய அனைவரும் ஏற்றுக் கொண்டனர். கல்லூரியின் பாடத்திட்ட முதன்மையர் பேராசிரியர் முருகப்பன் நன்றி கூறினார்.



மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கதிரேசன். உடன், கல்லூரிச் செயலர் ஹரி தியாகராஜன், கல்லூரி முதல்வர் பாண்டியராஜா, பேராசிரியர் முருகப்பன். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

தினமணி
www.dinamani.com

04-09-2023 பக்கம்.எண்:3

# 'அறநெறியில் பொருளீட்டுவதே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்'

மதுரை, செப். 3: அறநெறியில் பொருளீட்டுவதே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என அண்ணாமலை பல்கலைக் கழக துணைவேந்தர் ஆர். எம். கதிரேசன் தெரிவித்தார்.

மதுரை தெப்பக்குளத்தில் உள்ள தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியில் 39-ஆவது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கல்லூரி வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கல்லூரிச் செயலர் கருமுத்து க. ஹரி தியாகராசன் தலைமை வகித்தார்.



மதுரை தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டத்தை வழங்கிய அண்ணாமலை பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆர்.எம். கதிரேசன். உடன் கல்லூரிச் செயலர் கருமுத்து க. ஹரி தியாகராசன், முதல்வர் து. பாண்டியராஜா உள்ளிட்டோர்.

விழாவுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆர்.எம். கதிரேசன் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டத்தை வழங்கிப் பேசியதாவது:

இளைஞர்கள் பெற்றிருக்கும் பட்டம் தான் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கை விளக்கு. தோல்விகளைக் கண்டு என்றும் துவண்டுவிடக் கூடாது. உங்களுக்கான பாதையை உருவாக்கி, அதில் வெற்றி பெற வேண்டும். வாழ்க்கையின் வெற்றியைத் தீர்மானிப்பது கல்விக் கூடங்கள் தான். கல்வி என்பது திறனை மட்டும் வளர்ப்பதல்ல. அது மனிதத் தன்மையை வளர்க்க வேண்டும். அது மட்டுமன்றி, மனித சமுதாயத்துக்குப் பயன்படுகின்ற தன்மையோடு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அறிவியல் ஆன்மிகத்தோடு இணைந்து செயல்பட வேண்டும். இன்றைய அறிவியல் வளர்ச்சி, கண்டுபிடிப்புகள் குறித்து தமிழ் இலக்கியங்கள் பேசியுள்ளன.

வணிக மேலாண்மை குறித்த கருத்துகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பெருமை மிகுந்த மொழியை நாம் தாய்மொழியாகக் கொண்டுள்ளோம்.

இன்றைய இளைஞர்கள் நல்ல ஊதியத்தில் வேலை, ஆடம்பர வாழ்வு என குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடுகின்றனர். இது முன்னேற்றமல்ல. அறநெறியில் பொருளீட்டுவதே உண்மையான வெற்றி. அதுவே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்றார் அவர்.

நிகழ்வில், 1,567 மாணவ,மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டன. இதில் கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா, கல்லூரியின் பாடத்திட்ட முதன்மையர் முருகப்பன் உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

THE HINDU

04-09-2023 Pg No: 2

# Knowledge is superpower: V-C

**This is knowledge era and the country which employs it to the hilt will become superpower; India is moving towards that goal, says Annamalai University Vice-Chancellor R. M. Kathiresan**

The Hindu Bureau
MADURAI

This is the age of knowledge and the country which employs it to the hilt will become superpower. India is moving towards that goal, according to Annamalai University Vice-Chancellor R. M. Kathiresan.

Speaking at the 38th Graduation Day of Thiagarajar College here on Sunday, he told the graduands that the distance never mattered. It was the first step that mattered. This was the first step that they were going to take, he said.

The first era of development was based on agriculture and the Indian economy, which was based on agriculture, remained stable. The second era of development was through big industries. The present era was knowledge-based, he said.

"Where there is freedom, there is responsibility. There is difference between growth, development and success. Growth is any monetary or material-based incremental life, development is when this life is achieved through the proper means and success is when the growth is used for the benefit of the common good, he told the graduands.



**Future beckons:** R. M. Kathiresan, Vice-Chancellor of Annamalai University, hands over degree certificate to a student at the 38th Graduation Day of Thiagarajar College in Madurai on Sunday. College secretary K. Thiagarajan (right) looks on. G. MOORTHY

## From the hinterland

College secretary K. Thiagarajan said that it was the people from the rural and humble backgrounds who were giving back to the country. India had undergone profound transformation since the onset of the COVID-19 pandemic. The nation's economic landscape had evolved, challenging people to embrace fresh perspectives and innovative strategies.

Agriculture had a lot of scope. Nowadays people from IT sector had taken up agriculture as a passion and were contributing to it. The future of India was bright as it had a young and skilled workforce. The best way to predict the future was to create it, he told the graduands. Principal D. Pandiaraja was present. A total of 1,567 students received their degrees.

THE NEW INDIAN EXPRESS

06-09-2023 Pg No: 3

# Seven para athletes from Madurai get cash incentives

EXPRESS NEWS SERVICE @ Madurai

IN a first-of-its-kind, seven disabled athletes from Madurai received cash awards from Minister for Sports Udhayanidhi Stalin at Nehru stadium in Chennai on Monday. A GO was passed on August 24 announcing that 52 disabled players would receive a cash incentive of total ₹1.8 crore. Six of the seven players--Manoj, Prasath, Muniyasamy, Ganesan, Jasmine and Arulmozhi--had secured medals in the 19th Para Athletics Championship 2023 held at Gujarat in March 2023. Thiagarajar college student P Edward Francis struck gold in the 12th National Junior and Sub Junior Para Athletics Championship 2023 in January.



Speaking to *TNIE*, Sports Development Authority of Tamil Nadu (SDAT) para athletic coach J Ranjith kumar said, "It is for the first time that national-level disabled players are receiving cash incentive. Though a GO was passed in 2019 for issuing cash incentives to disabled players, it did not mention the exact amount to be given. In April, we took up the demand with minister Udhayanidhi Stalin. Following this, he ordered officials to pass a revised GO on August 24."

தினமணி
www.dinamani.com

15-09-2023 பக்கம்.எண்:7

# தியாகராஜர் கல்லூரியில் கருத்தரங்கம்

**மதுரை, செப். 14:** மதுரை தியாகராஜர் கல்லூரி தமிழ்த் துறை ஆய்வு மன்றக் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பண்டிதமணி அரங்கில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்கு உதவிப் பேராசிரியர் த. முத்தமிழ் தலைமை வகித்தார். தமிழ்த் துறைத் தலைவர் ராம. மலர்விழி மங்கையர்க்கரசி முன்னிலை வகித்தார்.

கருத்தரங்கில் மாணவி ரா.தமிழ்பாரதி 'தற்காலப் பேச்சுநடையில் விளித்தல் மரபு (விளிமரபு)' என்ற தலைப்பிலும், மாணவர் தி.பரணிதரன் 'அண்மைக்காலத் தமிழ்ப் புதினங்களில் வெட்டியான்களின் வாழ்வியல் அவலங்கள்' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் வாசித்தனர். தொடர்ந்து, மாணவி பா.சுபிக்ஷா, மு.அராபத் உமர் எழுதிய 'நசீபு' என்ற சிறுகதை தொகுப்பை நூலாக அறிமுகம் செய்தார்.

கருத்தரங்கில் ஆய்வு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ப.அன்பரசி உள்ளிட்ட தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். கருத்தரங்கை மாணவி க.மரகத மனோகரி தொகுத்து வழங்கினார். மாணவி ம.ஐஸ்வர்யா வரவேற்றார். மாணவி ச.நாக நந்தினி நன்றி கூறினார்.

தினமலர்
DINAMALAR

23-09-2023 பக்கம்.எண்:2

# மரபுசார் விதைகள் கண்காட்சி

மதுரை, செப்.23 –

மதுரை தியாகராஜர் கல்லூரியின் 75ம் ஆண்டு விழாவை முன்னிட்டு தாவரவியல் துறை சார்பில் மரபுசார் விதைகள் உள்நாட்டு மரங்கள் விற்பனை கண்காட்சி நடந்தது.

முதல்வர் பாண்டியராஜா தலைமையில் சூழலியலாளர் பாமையன் துவக்கி வைத்தார். மரபுசார் விதைகளையும், உள்நாட்டு மரங்களையும் பரவலாக்கவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கண்காட்சி நடந்தது. பாரம்பரிய நெல் வகைகள், உள்நாட்டு மரங்கள், சிறுதானிய விதைகள், கைவினை பனை பொருட்கள், சாணத்தில் செய்த அலங்கார பொருட்கள், அரிசி வகைகள், பூச்செடிகள் இடம்பெற்றிருந்தன. கல்லூரியின் 75வது ஆண்டு விழாவை முன்னிட்டு 75 மரக்கன்றுகள் பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

உழவர் கூட்டமைப்பு, தமிழ்நாடு வேளாண்மை விவசாய கூட்டமைப்பு விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியை துறைத் தலைவர் கண்ணன், பேராசிரியர்கள் வேலுசாமி, சரஸ்வதி ஒருங்கிணைத்தனர்.

தினமலர்
DINAMALAR

23-09-2023 பக்கம்.எண்:2

# தமிழாய்வு மன்றக் கருத்தரங்கு

மதுரை: தியாகராஜர் கல்லூரியில் தமிழ்த்துறை ஆய்வுமன்றக் கருத்தரங்கம் நடந்தது. பேராசிரியர் எழில்பரமகுரு தலைமை வகித்தார். துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி முன்னிலை வகித்தார். மாணவர்கள் கவேதா, 'நன்னூலார் காட்டும் நல்லாசிரியர் உ.வே.சா., தலைப்பிலும், அகிலன் 'புறநானூற்றைச் சிறப்பிக்கும் செய்யுள்கள்' என்ற தலைப்பிலும் கட்டுரை வாசித்தனர். மாணவர்கள் ஜெயபாரதி, சுப்ரமணியம் தமிழில் மொழிபெயர்த்த நட்ஹாம்சனின் 'பசி' என்ற நாவலை நூல் அறிமுகம் செய்தனர். மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் முத்தமிழ், அன்பரசி உடனிருந்தனர்.

தினமலர்
DINAMALAR

**24-09-2023** பக்கம்.எண்:11

உ
அருள் ஞான சபை
தியாகராசர் கல்லூரி
தெப்பக்குளம், மதுரை-625009

**281-ஆவது மாதக் கூட்டம்**



சிறப்புரை
பிரவசன திலகம்
உ.வே.குடந்தை
டாக்டர் **வேங்கடேஷ்** அவர்கள்

தலைப்பு
**கடமையைச் செய்**
**பலனை எதிர்பாராதே**

நாள்: 24.09.2023 கிழமை: ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 06.30 மணி
இடம்: டாக்டர். இராதா தியாகராசன் கலையரங்கம்
தியாகராசர் கல்லூரி, தெப்பக்குளம், மதுரை-09.

அனைவரும் வருக! அருள் பெறுக!

தினமணி
www.dinamani.com

**25-09-2023** பக்கம்.எண்:3

# தியாகராசர் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

மதுரை, செப். 24: மதுரை தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியில் நாட்டுநலப் பணித் திட்ட அணி எண் 226 சார்பில், முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்லூரி முதன்மையர் ஆர். சீனிவாசன் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.



மதுரை தியாகராசர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அந்தக் கல்லூரி முதன்மையர் ஆர். சீனிவாசன்.

இதில் கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் 2020-ஆம் ஆண்டு வரை பயின்ற முன்னாள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இதில் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலரும், ஒருங்கிணைப்பாளருமான மு. செல்வக்குமார், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.






# கண்ணன் என்னும் மன்னன்

க. ஹரி தியாகராசன்





தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சான்றாக இருப்பவர் என் தந்தையார் **திரு கருமுத்து கண்ணன்** அவர்கள்.

அவர் மண்ணை விட்டு மறைந்தாலும் அவர் ஆற்றிய செயல்கள், செய்த உதவிகள், வரைந்த திட்டங்கள் அனைத்தும் இன்றளவும் அனைவராலும் நினைக்கப்படுகின்றன.

என் அப்பாவுக்குப் பிடித்தமான நூல்கள் பல இருந்தாலும் திருக்குறள் அவர் முதன்மையாக விரும்பிய நூல் ஆகும். தன்னுடைய வாட்சப்) ஸ்டேட்டஸ் (Whatsapp Status) ஆக 'திருக்குறள் படியுங்கள்' என்று வைத்து இருந்தார் (Read Thirukkural).

திருக்குறள் வழி வாழ்க்கையை நடத்தியவர் என் அப்பா. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது. திருக்குறள் வழியிலேயே அறவாழ்க்கை நடத்தியவர். அறத்தின் வழியாகப் பொருளை ஈட்டியவர், ஈட்டிய பொருளை அனைவரும் மகிழும் படியாகக் கொடுத்து இன்பம் கண்டவர். இத்தகைய பெருமகனார் இம்மூன்றினால் வந்த வீடு பேற்றை அடைந்தார்.

## அறவாழ்க்கை:

கருமுத்து தியாகராசச் செட்டியாரின் மகனாகப் பிறந்த என் தந்தையார் நாத்தாவைப் போன்று அறம் சார்ந்த கொள்கைகளையும் நேர்மையையும் பின்பற்றியவர். ஆலைத் தொழிலை மேம்படுத்தியவர். காலத்திற்கு ஏற்ற முறையில் புதிய புதிய தொழில்நுட்பங்களை ஆலைகளில் புகுத்தியவர்.

தொழில்துறையின் நுணுக்கங்களை எல்லாம் நன்கு அறிந்த என் அப்பா மற்றவர்களுக்கு இவற்றைச் சொல்லித் தருவார். தொழிலிலும் வாழ்க்கையிலும் அறம் சார்ந்த வெளிப்படைத் தன்மை முக்கியம் என்று கூறுவார். 'மாற்றி யோசிக்கும்' தன்மை கொண்டவர். பல வெற்றிகளைக் கண்டவர். 'தரம், தரம், தரம்'; என்ற மூன்றை மட்டுமே தொழில் வெற்றியின் தாரக மந்திரமாகக் கொண்டவர்.

அறத்தின் வழியே பொருள் ஈட்டினார். ஈட்டிய பொருளைக் காத்து, வகுத்து, அறம் பல செய்தார். 21வயதில் ஆலைப் பொறுப்பை ஏற்றவர் அப்பா. ஆலைத் தொழில் தொடர்பாக ஒரு வழக்கை மேற்கொள்வதற்காக என் தாத்தா அப்பாவை புதுடில்லி உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். வழக்கு சாதகமாக முடிந்தது. சட்டத்தில் ஈடுபாடும் அனுபவமும் அதிகம்.

தொழிலில் தான் மட்டும் வளர்ந்தால் போதாது; அனைவரும் தந்தம் தொழில்களில் மேன்மை அடையவேண்டும் என்ற உயர்ந்த அறநோக்கம் கொண்டவர். நூற்பாலைத் துறை போட்டி நிறைந்த ஒன்று. இதில் முன்னேறுவதற்குத் தரத்தில் எவ்விதச் சமரசமும் செய்து கொள்ளாதவர். முன்னேற்றத்திற்கான எதிர்காலச் சிந்தனையை அதிகம் கொண்டவர். பழைமையும், புதுமையும் தன் எண்ணத்தில் கொண்டதால் தன் வாழ்க்கையில் வியாபாரத்தையும்,





தர்மத்தையும் பிரித்துக் கையாண்டார். வியாபாரம் வியாபாரமாக இருக்கவேண்டும்; தர்மம் தர்மமாக இருக்க வேண்டும் என்றார். விருப்பு வெறுப்பு அற்ற தன்மை, பொதுநோக்கு, சுயநலமின்மை இவற்றால் தொழிலில் சிறப்பாக முன்னேறலாம் என்றார்.

நூற்பாலைத் தொழில் முன்னேற்றம் அடையத் தொழிலாளர்களின் உதவியும் ஒற்றுமையும் தேவை. அவர்கள் தன்னுடைய ஆலையைப் போன்று, எங்கள் ஆலையில் பணிபுரிந்தார்கள். அவர்களுக்குத் தேவையான சுகாதார மேம்பாடு, அவர்கள் குழந்தைகளுக்கான படிப்பு போன்றவற்றையெல்லாம் எங்கள் நிர்வாகமே செய்தது. தன்னுடைய ஆலைகளுக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று பெறுவதிலும் ஏற்றுமதி விருதுகள் பெறுவதிலும் அறம் சார்ந்த கொள்கைகளையே பின்பற்றினார்.

அரசுக்குச் செலுத்த வேண்டிய வணிகவரி, வருமான வரி போன்ற வற்றை எவ்வித காலத்தாழ்வும் இல்லாமல் உடனடியாகச் செலுத்தும் காரணத்தால் பல முறை 'சம்மான் பத்திர' விருதுகளைத் தன் ஆலை களுக்குப் பெற்றுத் தந்தார்கள். ஆலைத் தொழிலோடு நின்று விடாமல் என் தாத்தா தொடங்கிய கல்வி நிறுவனங்களைத் தொடர்ந்து மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். தியாகராசர் கல்வி நிறுவனங்கள் என்றால் அங்கே மாணவராகச் சேரவும், ஆசிரியர் பணியில் சேரவும் எவ்வித நன்கொடைகளும் கொடுக்க வேண்டாம். தகுதிக்கும் தரத்துக்கும் மட்டுமே அங்கே முதலிடம் என்ற நற்பெயர் மக்களிடையே உலவி வந்ததற்கு அப்பாவின் ஆழங்கால்பட்ட திருக்குறள் அறிவும், அறச் சிந்தனையுமே காரணம்.

தன்னுடைய கல்வி நிறுவனங்களில் எந்த ஒரு பதவிக்கும் நியமனம் செய்ய வேண்டுமென்றால் அப்பா அவர்களே நேரடியாக நேர்முகம் செய்வார். அது பேராசிரியர் பணியாக இருக்கட்டும் அல்லது கடைநிலை ஊழியர் பணியாக இருக்கட்டும். இந்த நற்குணத்தைத் தன் தந்தையிடம் இருந்து பெற்றதாக அப்பா கூறுவார். இதனால் தன் நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களோடு ஒரு நெருக்கத்தை உருவாக்கமுடியும் என்றார். புதிய புதிய துறைகளை கல்வி நிறுவனங் களில் அறிமுகப்படுத்தினார். ஹனிவெல் என்ற நிறுவனத்தைத் தன்னுடைய கல்லூரி வளாகத்திலேயே அமைக்கும்படி செய்து, மதுரையின் முதல் ஐடி நிறுவனம் என்ற பெருமை கொண்டார்.

மதுரையை மிகவும் நேசித்தவர் என் அப்பா. தான் தொடங்கும் தொழில்கள் எல்லாம் மதுரையிலேயே இருக்கவேண்டும் என்று விரும்பினார். மதுரை ஒரு சிறந்த தொழில் நகரமாக மாறவேண்டும் என்று கருதினார். அதிகாரிகளிடமும் அமைச்சர்களிடமும் பழகுகின்ற வாய்ப்பு அப்பாவுக்கு இருந்ததால் மதுரை தூத்துக்குடி பாதையை தொழில்கள் நிறைந்த சாலையாக மாற்றவேண்டும் என்று வலியுறுத்தி னார் (Industrial corridor). மதுரையின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தவர் என் அப்பா என்பதில் எனக்குப் பெருமை.

கருமுத்து கண்ணன் என்றாலே மீனாட்சி அம்மன் திருக்கோவில் தக்கார் என்று உலகம் அவரை அறியும். உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தக்காராக 18 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து சேவை செய்தார். திருக்கோயிலை மேம்படுத்துவது, தூய்மையாக வைத்திருப்பது, வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவை யான வசதிகள் எல்லாம் செய்து தருவது, விழாக்களை பழைமை மாறாமல் நடத்துவது போன்றவற்றை முதன்மையாகக் கொண்டிருந் தார். தரமான பிரசாதம் ஆன்மீக அன்பர்களுக்கு கிடைக்கவேண்டும் என்று திருக்கோவிலிலேயே தரமான பிரசாதத்தை தயார் செய்யும்படி மாற்றினார். பொற்றாமரை குளத்தில் எப்பொழுதும் தண்ணீர் தேங்கும்படியாகச் செய்த பெருமை மிக்கவர். இதற்கெனப் பெரிதும் முயன்று இதனைச் சாதித்தார். புதிய கோவில்களைக் கட்டுவதைவிட, பழைமையான சிதைந்த கோவில்களைச் சீரமைப்பது நல்லது என்ற கொள்கை உடையவர். அதனால் சிதிலம் அடைந்த பல கோவில்களை மீண்டும் பழைமை மாறாமல் உருவாக்கினார். ஆகம முறைப்படி வழிபாடுகள் செய்யப்பட வேண்டும் என்ற பெரு விருப்பத்தையும் கொண்டிருந்தார்.

தன்னுடைய பொறுப்புக் காலத்திலேயே மிகப்பெரிய குடமுழுக்கு விழாவை மீனாட்சி அம்மன் கோவிலில் முன் நின்று 2008 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நடத்தி முடித்தார். தமிழகத்தில் ஆட்சிகள் மாறினாலும் அனைத்து ஆட்சிகளிலும் அப்பாவையே தக்காராக நியமித்தனர் என்றால் இவரது அறம் சார்ந்த செயலும் நேர்மையுமே காரணம் என்பது விளங்கும். மீனாட்சி அம்மன் கோவில் பல சிற்பக் கலைகள் நிறைந்த திருக்கோயில். அதைப் போன்ற ஒரு கலைக்கோயில் புதுமண்டபம் ஆகும். புது மண்டபத்தில் இருந்த சிற்பங்களை எல்லாம் பல்வேறு கடைகள் ஆக்கிரமித்து மறைத்து இருந்தன.

பலர் ஒத்துழைப்புடன் இக்கடைகள் எல்லாம் புதிய கட்டிடத்திற்கு மாறுமாறு செய்து இக்கலைக் கோயிலை அனைவரும் காணும்படியாகச் செய்வதற்கான தொடக்கத்தை ஏற்படுத்தினார். அப்பணி விரைந்து நடந்து கொண்டிருக்கிறது.



தமிழும் சைவமும் தம் இரு கண்கள் எனப் போற்றி வளர்த்தவர்கள் என் தாத்தாவும், பாட்டியும். திருவாசகத்தில் முழுமையான ஈடுபாடு கொண்டிருந்தனர். சைவ சமயம் மட்டுமின்றி சைவ உணவு முறையே சிறந்தது என்ற அறநோக்கோடு தம் நிறுவனங்களில் எல்லாம் சைவ உணவே கிடைக்குமாறு செய்தவர்கள்.

*'தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்'*

என்ற குறட்பாவைப் பின்பற்றினார்.

அண்மையில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் அப்பா செய்த உதவிகள் அதிகம். ஆக்ஸிஜன் தயாரிப்பு எந்திரங்களும், மருந்துகளும், உணவும் தொடர்ந்து அளித்து வந்தார். ஈதல் இசைபட வாழ்தல் தான் உயிருக்கு ஊதியம் என்ற நம்பிக்கை உடையவர்.

**செய்க பொருளை:**

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றும், செய்க பொருளை என்றும் வள்ளுவர் கூறுகிறார். அறம் செய்வதற்குப் பொருள் தேவை. எனவே அப்பொருளை என் தந்தையார் அறவழியில் நின்று ஈட்டினார். இரு பெரும் ஜவுளித் தொழில் நிறுவனங்களை நடத்திய அவர், அவற்றில் பல புதுமைகளைப் புகுத்தினார். பொருள் ஈட்டி, ஈட்டிய பொருளைக் காத்தார். அவற்றை வகுத்துச் செலவு செய்தார். திட்டமிட்டுச் செயல்படுத்தி, தம் தொழிலைப் பெரிது படுத்தினார். அப்பாவுக்கு பங்குச் சந்தையில் ஆர்வம் அதிகம்.

எதிலும் அகலக்கால் வைக்காமல் தொழிலைச் சீர்செய்து நிதானத்தைக் கடைப்பிடித்தார். வாழ்க்கையின் அளவு அறிந்து வாழவேண்டும் என்று அறிவுறுத்தினார். வாழ்க்கையில் ஒருவன் வெற்றி பெறவேண்டும் என்றால் விடாமுயற்சியும், நம்பிக்கையும், தக்க இடத்தில் இல்லை, என்று சொல்வதற்கான மன உறுதிப்பாடும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவார். மாணவர்களும் இளைஞர்களும் எதிர்காலச் சிந்தனையோடு திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்பார்.

*'அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து*
*தீது இன்றி வந்த பொருள்'*

என்று நேர்வழியில் பொருள் சேர்க்கும் முறையும், அதனால் வரும் இன்பமும் நிலைத்து நிற்கும் என்று எங்களிடம் அடிக்கடி கூறுவார்.

**அறத்தால் வருவதே இன்பம்:**

இன்பம் என்பது மனதின் நிறைவு என்பார். இன்பத்தை எதன் மூலமும் பெறலாம். என் தந்தையார் நகைச்சுவை உணர்வு மிக்கவர், இயற்கை ஆர்வலர், புகைப்படக் கலைஞர், வாஸ்து நூல் இயற்றியவர், ஜோதிடர். தன்னுடைய நெருங்கிய நண்பர்களுக்கு வாஸ்து மூலம் பல மேன்மைகளைக் காட்டி மகிழ்ந்தவர்.

தன்னைப்போலப் பிறரும் வாழவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர். தன் பேரக் குழந்தைகள் மீது அளவற்ற அன்பு செலுத்தினார். அடிக்கடி அவர்களுடன் பேசுவதையும், விளையாடுவதையும் வழக்கமாகக் கொண்டு இன்பம் கண்டார். 'கொய்' (Koi) ரக மீன்களை விரும்பி வளர்த்தார். கோயில் நிர்வாகத்தையும், பொது நிறுவனங்களையும் திறம்பட நிர்வகித்து அதனால் இன்பம் கண்டார். கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் அப்பா கூறும் அறிவுரைகளைக் கேட்டுப் பலர் முன்னேறினர். அறம், பொருள், இன்பம் மூலம் கிடைப்பதே வீடுபேறு என்று நம்பினார். தன் நிறைவு நாட்களில் ஒரு ஞானியைப்போல வாழ்ந்தார். அவர் மறைந்த நாளன்று அவருடைய மேசையில் பின்வரும் சீட்டு இருந்தது.

'என்னிடம் உள்ளது என்னோடு மறைந்து விடும். ஆனால் பிறருக்குச் செய்தது என்றென்றும் அவர்கள் மனதில் நிலையாய் நின்று இருக்கும்'; என்ற ரவீந்திரநாத் தாகூரின் சொற்கள் ஆங்கிலத்தில் இருந்தன. இதன்படியே மற்றவர்களும், நாங்களும் வாழவேண்டும் என்று எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் என் அப்பா. கவிப்பேரரசு **வைரமுத்து** அவர்கள் அப்பாவின் மறைவின் போது இரங்கல் கவிதை அனுப்பி இருந்தார்கள்.

*'மரணம் எனும் ஒரு கல்*
*பல பழங்களைப் பறித்து விட்டது...*
*ஒரே அடியில்'*

என்பது அக்கவிதையின் நிறைவு வரிகள்.

ஆம்! உண்மையில் பலரது வாழ்க்கையில் நண்பராய், ஆலோசகராய், வழிகாட்டியாய், இருந்த ஒருவர் மறைந்துவிட்டார். ஆனாலும் அவர் தம் கொள்கைகளாலும், தான் செய்த பணிகளாலும், உதவியாலும் என்றென்றும் மக்கள் மனதில் நிலைத்திருப்பார் என்பதே உண்மை!

காலன் கணக்கை எண்ணிப் பார்க்க இயலாது! மீனாட்சி சொக்கருக்கு கைலையில் பணி செய்துகொண்டு இருக்கிறாரோ என் அப்பா! அப்படித்தான் இருக்கும். அப்பா!.. என்றும் உங்கள் நினைவுகளுடன்... உங்கள் ஆசிகளுடன்... உங்கள் பெயரையும் குடும்பப் பெருமையையும் மேலோங்கச் செய்வேன். அதுதானே மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி! என்னை அவையத்து முந்தியிருக்கச் செய்தவர் அல்லவா நீங்கள்!

கண்ணன் என்னும் மன்னன் மண்ணில் நிகழ்த்திக் காட்டிய செயல்கள் ஏராளம்! ஏராளம்!! ●

தினமலர்
DINAMALAR
01-11-2023 பக்கம்.எண்:3

# படேல் பிறந்த தின விழா

**மதுரை, நவ. 1 -** சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த தினம் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு மதுரை காந்தி மியூசியம், தியாகராஜர் கல்லூரி சார்பில் விழா நடந்தது. மாணவி ஸ்வேதா வரவேற்றார்.

என்.சி.சி. மாணவர் படை தலைவர் அருண் நாகேந்திரன் முன்னிலை வகித்தார். மியூசிய செயலாளர் நந்தாராவ், கல்வி அலுவலர் நடராஜன், ஆராய்ச்சி அலுவலர் தேவதாஸ், கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி ஆகியோர் பேசினர். மாணவர் விகாஸ் நன்றி கூறினார். தேசிய மாணவர் படையினர், இளையோர் செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை ரயில்வே ஸ்டேஷனில் கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீவத்சவா தலைமையில் அதிகாரிகள், ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

ரயில்வே பாதுகாப்பு படை வீரர்கள், ரயில்வே பள்ளி மாணவ, மாணவிகளின் ஒற்றுமை ஓட்டம் நடந்தது. கூடுதல் கோட்ட மேலாளர் செல்வம், ஊழியர் நல அதிகாரி சங்கரன், விளையாட்டுத்துறை அதிகாரி சந்திரசேகர் கலந்து கொண்டனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

20-11-2023 பக்கம்.எண்:4



தியாகராசர் கல்லூரியின் பவள விழாவையொட்டி 'தி டோர்ஸ் டு எஜுகேஷன்' என்ற நூலை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட, டஃபே நிறுவன நிர்வாக இயக்குநர் மல்லிகா ஸ்ரீனிவாசன் பெற்றுக்கொண்டார். உடன், கல்லூரி தலைவர் க.உமா கண்ணன், செயலர் ஹரி தியாகராசன். படம்: ஆர்.அசோக்

### தனக்கு கிடைக்காத போதிலும்

# இளைஞர்களுக்கு உயர்கல்வி கிடைக்க செய்தவர் தியாகராசர் கல்லூரி நிறுவனர்

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் புகழாரம்

**மதுரை**

தனக்கு கிடைக்காத போதிலும், இளைஞர்களுக்கு உயர்கல்வி கிடைக்கச் செய்தவர் தியாகராசர் கல்லூரியின் நிறுவனர் தியாகராசர் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

மதுரை தியாகராசர் கல்லூரி பவள விழாவையொட்டி (75-ஆண்டு) கல்விக்கான கதவுகள் (தி டோர்ஸ் டு எஜுகேஷன்) என்ற நூல் வெளியீட்டு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. கல்லூரிச் செயலர் க. ஹரி தியாகராசன் வரவேற்றார்.

விழாவில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்று, நூலை வெளியிட்டுப் பேசியதாவது:

இக்கல்லூரியை உருவாக்கிய கருமுத்து தியாகராசர் சாந்தி நிகேதன், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் போன்ற இடங்களுக்குச் சென்றவர். நதிக்கரை அமைந்துள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் போன்று, தாமும் நதிக்கரையில் கல்லூரி தொடங்க திட்டமிட்டார். இதன்படி, வைகை நதிக்கரை மற்றும் தெப்பக்குளம் கரையை யொட்டி இக்கல்லூரியை தோற்றுவித்தார். அவருக்கு உயர்கல்வி படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும், ஏராளமான இளைஞர்களுக்கு உயர் கல்வி கிடைக்கச் செய்தவர்.

அவரது வழியில் அவரது குடும்பத்தினர் கல்லூரியை சிறப்பாக நடத்திச் செல்கின்றனர். இன்னும் பல 75 ஆண்டுகளை இக்கல்லூரி கொண்டாட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கல்லூரித் தலைவர் க.உமா கண்ணன் பேசுகையில், இந்த நூல் தியாகராசர் கல்லூரியின் வரலாறு மற்றும் பரிணாமத்தை காட்டுகிறது. கல்லூரி நிறுவனர் தியாகராசர், டாக்டர் ராதா தியாகராஜர் மற்றும் எனது கணவர் கருமுத்து டி.கண்ணன் ஆகியோரது நிலையான மதிப்புகள் பற்றி குறிப்பிடுகிறது என்றார்.

முன்னதாக, பவள விழா நூலை அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட, டஃபே நிறுவன நிர்வாக இயக்குநர் மல்லிகா ஸ்ரீனிவாசன் பெற்றுக் கொண்டார்.

புத்தகம் குறித்து ஆசிரியர் சந்தியா ஸ்ரீதர் பேசினார். முதல்வர் பாண்டியராஜா நன்றி கூறினார். விழாவில் முன்னாள் முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாஜக மாநில பொதுச் செயலாளர் ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி
www.dinamani.com

20-11-2023 பக்கம்.எண்:2

# ஏழை, எளியோருக்கு உயர் கல்வி அவசியம்

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்



மதுரை தியாகராசர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற விழாவில் பவள விழா மலரை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட டஃபே நிறுவன நிர்வாக இயக்குநர் மல்லிகா சீனிவாசன்.

மதுரை, நவ. 19: ஏழை, எளியோருக்கு உயர் கல்வி அவசியம் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பவள விழாவில் கல்வியின் சிறந்த கதவுகள் (தி டோர்ஸ் டு எஜுகேஷன்) என்ற நூலை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட, அதை டஃபே நிறுவன நிர்வாக இயக்குநர் மல்லிகா சீனிவாசன் பெற்றுக் கொண்டார். பின்னர், நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

கடந்த 75 ஆண்டுகளாக இந்த நிறுவனம் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்தச் சேவை இனி வரும் காலங்களில் தொடர வேண்டும். கல்லூரியின் நிறுவனர் கருமுத்து தியாகராஜர் சாந்தி நிகேதன், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தவர்.

இதையடுத்து வைகை நதி, தெப்பக்குளம் கரை அருகே இந்தக் கல்லூரியை தோற்றுவித்தார். இங்கு காமராஜர் உள்ளிட்ட சிறந்த கல்வியாளர்கள் வருகை தந்துள்ளனர். இன்றைய சூழலில் ஏழை, எளியோருக்கு உயர் கல்வி அவசியமான ஒன்றாக உள்ளது. இந்த வகையில், இந்த கல்லூரி நிறுவனருக்கு உயர் கல்வி படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், இந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்பு கிடைக்கச் செய்தார். இதை இவரது குடும்பத்தினரும் தவறாது பின்பற்றி வருகின்றனர் என்றார் அவர்.

கல்லூரித் தலைவர் உமா கண்ணன் பேசியதாவது:

கல்லூரியின் வரலாறு, பரிணாமத்தை இந்த நூல் வெளிப்படுத்துகிறது. தன்னலமற்ற சேவை, அர்ப்பணிப்பு, மகத்தான பங்களிப்புகள், தரமான கல்வி மட்டுமன்றி, ஒழுக்க கட்டமைப்பிலும் இந்த நிறுவனம் இன்று வரை உறுதியாக உள்ளது. இங்கு பயிலும் மாணவர்கள் சமகால உலகின் சவால்கள், மதிப்பு வாய்ந்த பணி நெறிமுறைகளைப் பின்பற்றி வெற்றி பெறுகின்றனர் என்றார் அவர்.

முன்னதாக, கல்லூரிச் செயலர் கருமுத்து ஹரி தியாகராசன் வரவேற்றார். பவளவிழா மலர் குறித்து ஆசிரியர் சந்தியா ஸ்ரீதர் பேசினார். பாஜக மாநில பொதுச் செயலர் ஸ்ரீனிவாசன், கல்லூரி பேராசிரியர்கள், முன்னாள் முதல்வர்கள், மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் டி.பாண்டியராஜா நன்றி கூறினார்.

**தினமலர்**
**DINAMALAR**

**20-11-2023** பக்கம்.எண்:4



